# டெபிட் கார்டின் மிக முக்கிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

ஒரு புரிதல், ஒரு ஒப்பந்தம்

## ஆக்ஸிஸ் பேங்க் டெபிட் கார்டை நிர்வகிக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

முக்கியமானது: ஆக்ஸிஸ் பேங்க் டெபிட் கார்டைப் பயன்படுத்துவதற்கு முன், இந்த டெபிட் கார்டு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கவனமாகப் படிப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். டெபிட் கார்டைப் பயன்படுத்துவதன் மூலம், இங்கு பட்டியலிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நீங்கள் நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்கிறீர்கள் மற்றும் அவற்றிற்குக் கட்டுப்படுவீர்கள். மேலும், தொடர்புடைய இந்திய ரிசர்வ் வங்கி (RBI) விதிமுறைகள், ரிசர்வ் பேங்க்கின் பரிவர்த்தனை கட்டுப்பாட்டு ஒழுங்குமுறை, பரிவர்த்தனை மேலாண்மைச் சட்டம் 1999 ("The Act"), சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அனைத்து விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் அவ்வப்போது திருத்தப்படும்/ மாற்றியமைக்கப்படும்/ பொருந்தும் மற்றும் அவ்வப்போது நடைமுறையில் உள்ள பிற சட்டங்கள் ஆகியவற்றுடன் இணங்குவதை உறுதிசெய்கிறீர்கள் மற்றும் ஏற்றுக்கொள்கிறீர்கள். மேலும், ஆக்ஸிஸ் பேங்க்கில் உங்கள் சேமிப்புக் கணக்கு/ நடப்பு கணக்குகளின் செயல்பாட்டு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குத் தொடர்ந்து கட்டுப்படுவீர்கள்.

### வரையறைகள்

1. "பேங்க்", "ஆக்ஸிஸ் பேங்க்" என்பது ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட் மற்றும் அதன் அடுத்து வருபவர்கள் மற்றும் நியமிக்கப்பட்டவர்களைக் குறிக்கும்
2. "கார்டு" அல்லது "டெபிட் கார்டு" என்பது, கார்டுதாரருக்கு வழங்கப்படும். ஆக்ஸிஸ் பேங்க்கின் மாஸ்டர் கார்டு/விசா/ரூபே டெபிட் கார்டைக் குறிக்கும்.
3. கார்டுதாரர்", "நீங்கள்", "உங்கள்", "அவர்" அல்லது இதே போன்ற பிரதிப்பெயர்கள், சூழலுக்கேற்றவாறு, நியமிக்கப்பட்ட கணக்கை(கணக்குகளை) இயக்குவதற்காக ஆக்ஸிஸ் பேங்க்கால் ஆக்ஸிஸ் பேங்க் டெபிட் கார்டு வழங்கப்பட்டுள்ள ஆக்ஸிஸ் பேங்க்கின் வாடிக்கையாளரைக் குறிக்கும். கார்டுதாரரை ஆண் பாலினத்தில் குறிப்பிடும் அனைத்துக் குறிப்புகளிலும் பெண் பாலினமும் அடங்கும்.
4. "கணக்கு(கள்)" என்பது, டெபிட் கார்டின் செல்லுபடியாகும் செயல்பாட்டிற்கு தகுதியான கணக்கு(களுக்கு) ஆக்ஸிஸ் பேங்க்கால் நியமிக்கப்பட்ட கார்டுதாரரின் சேமிப்பு அல்லது நடப்புக் கணக்குகளைக் குறிக்கும். கார்டுதாரர் கணக்கு வைத்திருப்பவராக இருக்க வேண்டும் அல்லது ஒற்றை கையொப்பமிடுபவர் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட கணக்கு வைத்திருப்பவர்கள் / கையொப்பமிடுபவர்கள் இருக்கும்போது தனியாக செயல்பட அங்கீகாரம் பெற்றவராக இருக்க வேண்டும்.
5. "முதன்மைக் கணக்கு" என்பது, கார்டுடன் பல கணக்குகள் இணைக்கப்பட்டிருக்கும் போது, இயக்குவதற்கான முக்கிய/முதல் கணக்கு என்று குறிப்பிடப்பட்ட கணக்கைக் குறிக்கும், அதாவது, வாங்கும் பரிவர்த்தனைகள், பணம் எடுப்பதற்கான கட்டணங்கள் மற்றும் கார்டு தொடர்பான கட்டணங்கள் பற்று வைக்கப்படும் கணக்கைக் குறிக்கும்.
6. "நியமிக்கப்பட்ட கணக்குகள்" என்பது, மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு முதன்மைக் கணக்கை உள்ளடக்கியதாகும், மேலும் இது கார்டுதாரரின் டெபிட் கார்டு மற்றும் PIN மூலம் அணுகுவதற்கு எழுத்துப்பூர்வமாக பரிந்துரைக்கப்பட்ட அவருடைய கணக்கை (கணக்குகளை) குறிக்கும்.
7. "ATM" என்பது, இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள, கார்டுதாரர் தனது டெபிட் கார்டைப் பயன்படுத்தி, ஆக்ஸிஸ் பேங்க்கில் வைத்திருக்கும் தனது கணக்கில் (கணக்குகளில்) உள்ள நிதியை அணுகக் கூடிய, ஆக்ஸிஸ் பேங்க் அல்லது பகிரப்பட்ட நெட்வொர்க்கில் உள்ள வேறு ஏதேனும் பேங்க்கின் தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரத்தைக் குறிக்கும்.
8. "PIN" என்பது, கார்டுதாரரால் அவ்வப்போது தேர்ந்தெடுக்கப்படுகின்ற, ஆக்ஸிஸ் பேங்க்கால் ஒதுக்கப்பட்ட தனிப்பட்ட அடையாள எண்ணை (ATM-களை அணுகுவதற்குத் தேவையானது) குறிக்கும்.
9. "பரிவர்த்தனை" என்பது, கார்டுதாரர் தனது கார்டை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பயன்படுத்தி, காணக்கின் மீது நடவடிக்கை எடுக்க ஆக்ஸிஸ் பேங்க்குக்கு வழங்கும் அறிவுறுத்தலைக் குறிக்கும். (பரிவர்த்தனைகளுக்கான எடுத்துக்காட்டுகளாக சில்லறை கொள்முதல், பணம் எடுத்தல், பணம் / காசோலை வைப்புகள் போன்றவை இருக்கலாம்).
10. "சர்வதேசப் பரிவர்த்தனைகள்" என்பது, இந்தியா, நேபாளம் மற்றும் பூட்டானுக்கு வெளியே, சர்வதேச அளவில் செல்லுபடியாகும் டெபிட் கார்டு மூலம் கார்டுதாரர் மேற்கொள்ளும் பரிவர்த்தனைகளைக் குறிக்கிறது.
11. "அறிக்கை" என்பது, கொடுக்கப்பட்ட காலத்திற்குள் கார்டுதாரர்(கள்) மேற்கொண்ட பரிவர்த்தனைகள் மற்றும் அந்தக் கணக்கில் உள்ள நிலுவைத் தொகையைக் குறிப்பிட்டு, கார்டுதாரருக்கு ஆக்ஸிஸ் பேங்க் அனுப்புகின்ற குறிப்பிட்ட காலக் கணக்கு அறிக்கையைக் குறிக்கும். சேர்க்கத் தகுந்ததாக ஆக்ஸிஸ் பேங்க் கருதுகின்ற எந்தத் தகவலும் இதில் சேர்க்கப்படலாம்.
12. "வணிகர்" அல்லது "வணிக நிறுவனங்கள்" என்பது, கார்டை ஏற்கும்/மதிக்கும், ஏற்கத்தக்க நிறுவனங்களை குறிக்கும். மற்றவற்றுடன் அடங்கியவை: ஆக்ஸிஸ் பேங்க் அல்லது மாஸ்டர் கார்டு/ விசா/ ரூபே இண்டர்நேஷனல் மூலம் விளம்பரப்படுத்தப்பட்ட.கடைகள், ஷாப்கள், உணவகங்கள், விமான நிறுவனங்கள் போன்றவை.
13. "EDC" அல்லது "மின்னணு டேட்டா கேப்சர்" என்பது, இந்தியாவிலோ அல்லது வெளிநாடுகளிலோ, ஆக்ஸிஸ் பேங்க் அல்லது வேறு ஏதேனும் பேங்க்கின் பகிரப்பட்ட நெட்வொர்க்கில் உள்ள, வணிக நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் பரிவர்த்தனைகளுக்கு கணக்கை (கணக்குகளை) பற்று வைக்க அனுமதிக்கும் மின்னணு பாயின்ட்-ஆஃப்-சேல்ஸ் முனையங்களைக் குறிக்கும்.
14. "மாஸ்டர் கார்டு/ விசா / ரூபே" என்பது, பொதுவாக மாஸ்டர் கார்டு/ விசா/ ரூபே இண்டர்நேஷனல் உடன் இணைக்கப்பட்டுள்ள வர்த்தக முத்திரையைக் குறிக்கும்.
15. "மாஸ்டர் கார்டு/ விசா/ ரூபே ATM நெட்வொர்க்" என்பது டெபிட் கார்டை ஏற்கும் மற்றும் மாஸ்டர்கார்டு/ விசா/ ரூபே சின்னங்கள் காட்சிப்படுத்தப்பட்ட ATM-களைக் குறிக்கும். டெபிட் கார்டு ("கார்டு"), பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ், 'திரிசூல், சமர்த்தேஸ்வரர் கோவில் எதிரில், லா கார்டன், எல்லிஸ் பிரிட்ஜ், குஜராத், அகமதாபாத்-380006, இந்தியா' என்ற முகவரியில் தனது பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட்டால் ("ஆக்ஸிஸ் பேங்க் லிட்") வழங்கப்படுகிறது:

### கார்டு செல்லுபடியாகும் காலம் மற்றும் கார்டுதாரரின் கடமைகள்

1. கார்டை வழங்குதல் மற்றும் பயன்பாடு, இந்திய ரிசர்வ் வங்கி, ஆக்ஸிஸ் பேங்க் மற்றும் ஃபெமா 1999 ஆகியவற்றால் அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டது.
2. இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள மாஸ்டர் கார்டு/ விசா/ ரூபே ATM நெட்வொர்க்கில் உறுப்பினர்களாக உள்ள ஆக்ஸிஸ் பேங்க் ATM-கள், பிற வங்கிகளின் ATM-கள் மற்றும் வணிக நிறுவனங்களில் உள்ள விசா/ ரூபே பாயின்ட் ஆஃப் சேல் ஸ்வைப் டெர்மினல்கள் ஆகியவற்றில் அவ்வப்போது வங்கியால் அனுமதிக்கப்படும் பரிவர்த்தனை விருப்பங்களுக்கு மட்டுமே கார்டு செல்லுபடியாகும்.
3. இந்த கார்டு எப்போதும் ஆக்ஸிஸ் வங்கியின் சொத்தாக இருக்கும் மற்றும் ஆக்ஸிஸ் வங்கியின் கோரிக்கையின் அடிப்படையில் உடனடியாக மற்றும் எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாமல் ஆக்ஸிஸ் வங்கிக்கு திருப்பி வழங்கப்பட வேண்டும். கார்டுதாரர், வங்கி அதிகாரியிடம் கார்டை ஒப்படைப்பதற்கு முன் அவர் யார், என்ன என்ற விவரங்களைத் தெளிவாக அறிந்த பிறகே கார்டை அவரிடம் ஒப்படைக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்.
4. எந்தச் சூழ்நிலையிலும் டெபிட் கார்டை கார்டுதாரர் மற்றவருக்கு மாற்றவோ அல்லது ஒதுக்கீடு செய்யவோ முடியாது.
5. கார்டைப் பெற்றவுடன் உடனடியாக அதில் நீங்கள் கையொப்பமிட வேண்டும். அதை வேறு யாரையும் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது மற்றும் அனைத்து நேரங்களிலும் உங்கள் சொந்தக் கட்டுப்பாட்டில் கார்டை வைத்திருப்பதன் மூலம், கார்டு தவறாகப் பயன்படுத்தப்படாமல் பாதுகாக்க வேண்டும்.
6. கார்டுடன் பயன்படுத்துவதற்காக கார்டுதாரருக்கு வழங்கப்பட்ட தனிப்பட்ட அடையாள எண் (PIN) அல்லது கார்டுதாரரால் PIN ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த எண்ணும், கார்டுதாரருக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டும், அது கார்டுதாரரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்கானது மற்றும் மாற்ற முடியாதது மற்றும் கண்டிப்பாக இரகசியமானது. PIN எண்ணை மூன்றாம் தரப்பினர் பயன்படுத்துவதற்கு வசதியாக எந்த வடிவத்திலும், இடத்திலும் அல்லது முறையிலும் எழுத்துப்பூர்வமாக வைத்திருக்கக்கூடாது. பேங்க்கின் பணியாளர்களுக்கோ அல்லது வணிக நிறுவனங்களுக்கோ, எந்தவொரு மூன்றாம் தரப்பினருக்கும், எந்தவொரு சூழ்நிலையிலும் அல்லது எந்த வகையிலும் தன்னிச்சையாகவோ அல்லது வேறுவிதமாகவோ PIN-ஐ வெளியிடக் கூடாது. PIN-களை வழங்கும்போது வங்கி கவனமாகச் செயல்படும் மற்றும் கார்டுதாரருக்குத் தவிர, கார்டுதாரரின் PIN-ஐ வெளியிடாமல் இருக்கக் கடமைப்பட்டிருக்கும்.
7. கார்டைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட, பரிமாற்றம் செய்யப்பட்ட மற்றும் பிற பரிவர்த்தனைகளின் தொகை கார்டுதாரரின் கணக்கில் உடனடியாகப் பற்று வைக்கப்படும். அத்தகைய பரிவர்த்தனைகளைப் பூர்த்தி செய்ய கார்டுதாரர் கணக்கில் போதுமான நிதியை வைத்திருக்க வேண்டும்.
8. டெபிட் கார்டைப் பயன்படுத்தி, ஆக்ஸிஸ் பேங்க்கில் உள்ள கார்டுதாரர்களின் கணக்கை (கணக்குகளை) ஓவர் டிரா செய்வதற்கு அல்லது ஒப்புக்கொள்ளப்பட்ட ஓவர் டிராஃப்ட் வரம்புக்கு அதிகமாக பணம் எடுப்பதற்கு கார்டுதாரருக்கு உரிமை இல்லை.
9. கார்டுதாரரால் அங்கீகரிக்கப்பட்டாலும் இல்லாவிட்டாலும், கார்டைப் பயன்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளுக்கு கார்டுதாரரே பொறுப்பாவார், மேலும் ரிசர்வ் பேங்க்கின் வழிகாட்டுதல்கள் அல்லது அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம், 1999 இன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் அல்லது இந்தியா மற்றும்/அல்லது உலகில் எங்கும் உள்ள வேறு எந்த நாடு/ மாநிலம்/ கண்டம்/ பிரதேசம் ஆகியவற்றில் அந்த நேரத்தில் நடைமுறையில் உள்ள பிற சட்டங்கள் ஏதேனும் மீறப்படுவதால் ஏற்படும் ஏதேனும் அபராத நடவடிக்கை உட்பட, கார்டு அல்லது தொடர்புடைய PIN-ஐ அங்கீகரிக்காமல் பயன்படுத்துவதால் ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு இந்த ஒப்பந்தத்தின் முடிவைப் பொருட்படுத்தாமல் ஆக்ஸிஸ் பேங்க் பொறுப்பாகாது. மின்னணு/ இணைய வர்த்தக போர்ட்டல்கள் மூலம் வெளிநாட்டு அந்நிய செலாவணி வர்த்தகத்திற்கு டெபிட் கார்டைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.
10. கணக்குத் துவங்கும் போது, வாடிக்கையாளரின் சேமிப்பு அல்லது நடப்புக் கணக்கு நாமினியாக உள்ளவர் டெபிட் கார்டு விண்ணபத்திற்கான இயல்புநிலை நாமினியாகக் கருதப்படுவார். எங்களிடம் கணக்கு துவங்கும் போது கொடுக்கப்பட்டதைத் தவிர, வேறு எந்த டெபிட் கார்டு நாமினேஷனையும் வங்கி ஏற்றுக் கொள்ளாது.
11. குறிப்பிடப்பட்ட மாதம்/ வருடத்தின் கடைசி நாள் வரை டெபிட் கார்டு செல்லுபடியாகும் என்பதைக் கவனத்தில் கொள்ளுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். OD கணக்குகளாக இருக்கும் பட்சத்தில், கார்டு செல்லுபடியாகும் காலம் என்பது, அது இணைக்கப்பட்டுள்ள OD கணக்கின் செல்லுபடியாகும் காலத்திற்கு உட்பட்டதாகும். டெபிட் கார்டு காலாவதியாகும் போது அதைப் பல துண்டுகளாக வெட்டி, அழிப்பதற்கு இதன் மூலம் நீங்கள் உறுதியளிக்கிறீர்கள். கார்டு காலாவதியாகும் முன்பு, வாடிக்கையாளர்களுக்கு முன்கூட்டியே அறிவித்த பிறகு, ஆக்ஸிஸ் பேங்க்கின் தனி விருப்பப்படி, உங்கள் கணக்கின் நடத்தையை மதிப்பீடு செய்த பின், உங்கள் புதுப்பிக்கப்பட்ட டெபிட் கார்டு உங்களுக்கு அனுப்பப்படும். காலாவதியாகும் போது உங்கள் கார்டு கணக்கை புதுப்பிப்பதற்கான மற்றும் ஏதேனும் புதுப்பித்தல் கட்டணங்களை உங்கள் கணக்கில் பற்று வைப்பதற்கான முழு உரிமையை ஆக்ஸிஸ் பேங்க் கொண்டுள்ளது.
12. ஆக்ஸிஸ் பேங்க் அனுப்பிய கணக்கு அறிக்கையில் ATM/ வணிக நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனை விவரங்களில் ஏதேனும் முறைகேடுகள் அல்லது முரண்பாடுகள் இருந்தால், அறிக்கைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கார்டுதாரர் ஆக்ஸிஸ் பேங்க்குக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிப்பார். இந்த நேரத்தில் தெரிவிக்கவில்லை என்றால், பரிவர்த்தனை மற்றும் கணக்கு அறிக்கை இரண்டும் சரியாக இருப்பதாக ஆக்ஸிஸ் பேங்க் கருதும்.
13. உங்கள் கார்டு, இந்தியாவில் உள்ள உள்நாட்டுத் தொடர்பு-அடிப்படையிலான ATM-கள் மற்றும் POS வணிக விற்பனை நிலையங்களில் மட்டுமே பயன்படுத்தும் வசதியுடன் செயல்படுத்தப்படுகிறது.
14. கார்டு இல்லாத (உள்நாட்டு மற்றும் சர்வதேச) மற்றும் கார்டு உள்ள (சர்வதேச) பரிவர்த்தனைகளை ஆக்ஸிஸ் வங்கி மொபைல் பேங்கிங் செயலி, ஓபன், இணைய வங்கி அல்லது ஆக்ஸிஸ் வங்கி கிளைகள் போன்ற பல்வேறு வழிகளில் செயல்படுத்தலாம் / முடக்கலாம். பொதுவாகவே டெபிட் கார்டில் கான்டாக்ட்லெஸ் ஆப்ஷன் இருக்கும், இருப்பினும், உங்கள் விருப்பத்தின் படி, இதனை ஆக்ஸிஸ் வங்கி மொபைல் பேங்கிங்செயலி, ஓபன், இணைய வங்கி அல்லது ஆக்ஸிஸ் வங்கி கிளைகள் போன்ற பல்வேறு வழிகளில் செயல்படுத்தலாம் / முடக்கலாம். கான்டாக்ட்லெஸ் ஆப்ஷன் ரூபே டெபிட் கார்டுகளுக்கும் பொருந்தும்.
15. ஆன்லைன், POS, ரொக்கம் மற்றும் காண்டாக்ட்லெஸ் ஆகியவற்றுக்கான லிமிட்கள் ஒட்டுமொத்த லிமிட்டாக இருக்கும், தனிப்பட்ட லிமிட் அல்ல.
16. அனைத்து வகையான பரிவர்த்தனைகளுக்கான பரிவர்த்தனை லிமிட்களை (ஒட்டுமொத்த கார்டு லிமிட்டிற்குள்) மேலே குறிப்பிடப்பட்டுள்ள சேனல்கள் மூலம் அமைக்கலாம்/ மாற்றலாம்.
17. உங்கள் கார்டு வகைக்குப் பொருந்தும் ஆன்லைன்/ POS/ பணம் எடுத்தல் லிமிட்களுக்கு, https://www.axisbank.com/retail/cards/debit-cards என்ற இணைப்பைப் பார்க்கவும். மேலும் விருப்பத்தை ஆராயவும்.

### சர்வதேசப் பயன்பாடு

1. கார்டைப் பயன்படுத்துவது, கண்டிப்பாக இந்திய ரிசர்வ் பேங்க்கின் (RBI) பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கேற்ப இருக்க வேண்டும். நீங்கள் அதற்கு இணங்கத் தவறினால், அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம், 1999 இன் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு நீங்கள் பொறுப்பாவீர்கள், மேலும் ஆக்ஸிஸ் பேங்க் அல்லது RBI மூலம் ஆக்ஸிஸ் பேங்க்கின் டெபிட் கார்டை வைத்திருப்பதற்கு நீங்கள் தடை செய்யப்படலாம். நீங்கள் ரிசர்வ் பேங்க்கின் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு இணங்காததால் ஏற்படும் எந்த/அனைத்து விளைவுகளுக்கும் பொறுப்பு ஏற்காமலும், பாதிப்படையாமலும் ஆக்ஸிஸ் பேங்க்கை நீங்கள் வைத்திருக்க வேண்டும்.
2. நேபாளம் மற்றும் பூட்டானில் (அதாவது உள்ளூர் நாணயம் அல்லது இந்திய ரூபாய் அல்லாத எந்த நாணயத்திலும்) வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைக்கு இந்த டெபிட் கார்டு செல்லுபடியாகாது.
3. இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அவ்வப்போது வெளியிடும் அந்நியச் செலாவணி உரிமைகளை மீறுவதால் கார்டுதாரருக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் இழப்பு அல்லது சேதம் தொடர்பாக ஆக்ஸிஸ் பேங்க் எப்பொழுதும் எந்தப் பொறுப்பையும் கொண்டிருக்காது மற்றும் ஆக்ஸிஸ் பேங்க் கார்டுதாரர் தனது உரிமைகளை மீறுவதை அறிந்து கொள்ளும் போது அது பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டதாகக் கருதப்படும்.
4. வெளிநாடு வாழ் இந்தியர்கள் சர்வதேச அளவில் செல்லுபடியாகும் டெபிட் கார்டை வைத்திருக்க முடியும், இந்தியா/ வெளிநாடுகளில் அதன் பயன்பாட்டினால் எழும் அனைத்து நிலுவைத் தொகைகளும் ஆக்ஸிஸ் பேங்க்கில் உள்ள NRE/ NRO கணக்கின் மூலம் செலுத்தப்படும்.
5. ஓவர் டிராஃப்ட் கணக்குகளுடன் இணைக்கப்பட்ட டெபிட் கார்டுகளில் சர்வதேச பரிவர்த்தனைகள் அனுமதிக்கப்படாது.
6. இந்திய ரிசர்வ் வங்கியின் ("ஆர்பிஐ") 19-06-2018 தேதியிட்ட முதன்மை வழிகாட்டுதல்கள் / சுற்றறிக்கை ஆர்பிஐ / 2017-18 / 204 இன் படி, தாராளமயமாக்கப்பட்ட பணப் பரிமாற்றத் திட்டத்தின் (எல்ஆர்எஸ்) கீழ் பணம் அனுப்புவதற்கு இந்திய குடிமக்கள் நிரந்தர கணக்கு எண்ணை ("பான்") வழங்குவது அவசியமாகும். ஆகவே, இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு முறை வெளிநாட்டிற்கு பணம் அனுப்பும் போதும் இந்திய குடிமக்கள் (பணம் அனுப்புபவர்) நிரந்தர கணக்கு எண் பற்றிய விவரங்களை வழங்க வேண்டும். இந்த விதிமுறையின் படி, கணக்கு திறக்கும் நேரத்தில் அல்லது அதற்குப் பிறகு வாடிக்கையாளர் தனது செல்லுபடியாகும் நிரந்தர கணக்கு எண் பற்றிய விவரங்களை வழங்கத் தவறினால், வங்கி டெபிட் கார்டில் சர்வதேச பரிவர்த்தனை வசதியை வழங்காது.
7. தற்போதுள்ள ஒழுங்குமுறைகளின் படி RBI அனுமதிக்காத பொருட்கள்/ சேவைகள் போன்ற ஏதேனும் சட்டவிரோதமான வாங்குதல்களுக்கு பணம் செலுத்துவதற்கு கார்டைப் பயன்படுத்தாமல் இருக்க நீங்கள் உறுதியளித்துள்ளீர்கள்.
8. சர்வதேச டெபிட் கார்டுகளை இணையத்தில் அல்லது லாட்டரி சீட்டுகள், தடைசெய்யப்பட்ட அல்லது தடுக்கப்பட்டுள்ள பத்திரிக்கைகள், ஸ்வீப் பங்குகளில் பங்கேற்பது, திரும்ப அழைக்கும் சேவைகளுக்குப் பணம் செலுத்துதல் மற்றும்/அல்லது அந்நியச் செலாவணி ஈட்டுவதை அனுமதிக்காத பொருட்கள்/ செயல்பாடுகள் போன்ற தடைசெய்யப்பட்ட பொருட்களை வாங்குவதற்குப் பயன்படுத்த முடியாது".
9. இந்தியாவில் வசிக்கும் எவரும், மின்னணு/ இன்டர்நெட் டிரேடிங் போர்ட்டல்கள் மூலம் வெளிநாட்டு அந்நியச் செலாவணி வர்த்தகத்திற்காக இந்தியாவிற்கு வெளியில் நேரடியாக/ மறைமுகமாக/ எந்த வடிவத்திலும் பேமெண்ட்களை வசூலித்தல் /செலுத்துதல்/ அனுப்புதல், அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம் (FEMA) 1999 இன் மீறலுக்குத் தன்னைத்தானே/ தங்களைத் தாங்களே பொறுப்பாக்கிக் கொள்வதாகும், தவிர உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் (KYC) விதிமுறைகள் தொடர்பான விதிமுறைகளை மீறுவதற்கும் பொறுப்பாக்கும். மேலும், உங்கள் டெபிட் கார்டில் (ஆன்லைன் வங்கிக் கணக்கிற்கு) அத்தகைய தடை செய்யப்பட்ட பரிவர்த்தனை ஏதேனும் காணப்பட்டால், கார்டு (அல்லது கணக்கு) உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மூடப்பட்டு, அது ஒழுங்குமுறை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்படும்.
10. வருமான வரி மசோதா 2025 இன் படி, இந்திய குடிமகனாக இருக்கும் கார்டுதாரர், இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தற்போதுள்ள விகிதத்தின்படி மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில், தாராளமயமாக்கப்பட்ட பணப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் செய்யப்படும் சர்வதேச பரிவர்த்தனைகளுக்கு, வங்கிக்கு டிசிஎஸ் (மூலத்தில் வரி வசூல்) செலுத்த வேண்டும்.
11. LRS தன்மையுடைய இந்தியாவில் வசிக்கும் தனிநபர் கணக்கு பரிவர்த்தனைகளுக்கு, நடப்பு நிதியாண்டிற்கான PAN மட்டத்தில் அனுமதிக்கப்பட்ட வரம்பை மீறினால், டெபிட் கார்டின் சர்வதேச அணுகல் வங்கியால் தடுக்கப்படும். அது அடுத்த நிதியாண்டில் தடைநீக்கப்படும். இது RBI முதன்மை வழிகாட்டுதல், RBI/FED/2017-18/3FED முதன்மை வழிகாட்டுதல் எண். 7/2015-16 இன் படி அமைந்துள்ளது.
12. ரிசர்வ் வங்கி முதன்மை வழிகாட்டுதல்களில் குறிப்பிட்டுள்ள வரம்புகளை மீறி எல்ஆர்எஸ் (தாராளமயமாக்கப்பட்ட பணப் பரிமாற்றத் திட்டம்) பரிவர்த்தனைகளில் எந்தவொரு மீறலும் ஏற்பட்டால், அந்த நிதிகளை திரும்பப் பெறுதல் மற்றும் அவ்வப்போது ரிசர்வ் வங்கி பரிந்துரைத்தபடி விதிமீறல் முறைகளை நிறைவு செய்தல் அவசியமாகும். மீறல் செயல்முறை பற்றி வாடிக்கையாளர் ஆர்பிஐ இணையதளத்தை பார்க்கலாம். அத்தகைய எந்தவொரு மீறலுக்கும் அல்லது முரண்பாட்டு முறைகளை பூர்த்தி செய்வதற்குமான பொறுப்பும் வங்கி ஏற்காது.

### முதன்மை வழிகாட்டுதல்கள் – தாராளமயமாக்கப்பட்ட பணப் பரிமாற்றத் திட்டம் (எல்ஆர்எஸ்):

1. இந்த நிதியாண்டில் டெபிட் கார்டு உட்பட இந்தியாவில் உள்ள அனைத்து ஆதாரங்களிலிருந்தும் வாங்கப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் மொத்த தொகை யுஎஸ்டி 2,50,000 அமெரிக்க டாலர் (இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் அமெரிக்க டாலர்) அல்லது சர்வதேச பரிவர்த்தனைகளுக்கான இந்திய ரிசர்வ் வங்கி (' ஆர்பிஐ'') அவ்வப்போது வரையறுக்கும் வருடாந்திர வரம்பின்படி இருக்கும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பரிவர்த்தனை விவரங்கள் வெளிநாட்டு நாணயங்கள் மேலாண்மைச் சட்டம், 1999 மற்றும் அதன்படி வெளியிடப்பட்ட எந்தவொரு விதி, ஒழுங்குமுறை, அறிவிப்பு, வழிகாட்டுதல் அல்லது உத்தரவை (ஃபெமா விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்') மீறவதற்காகவோ அல்லது தவிர்ப்பதற்காகவோ வடிவமைக்கப்படவில்லை.
3. எந்தவொரு தேவைக்கும் இணங்க மறுத்தால் அல்லது ஃபெமா விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு திருப்திகரமாக இணங்க மறுத்தால், பரிவர்த்தனையை வகைப்படுத்துவதிலிருந்து எழுத்துப்பூர்வமாக மறுக்க வங்கிக்கு உரிமை உண்டு, மேலும் ஏதேனும் மீறல் / ஏய்ப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது என வங்கி நம்பினால், அந்த விவகாரத்தை ஆர்பிஐ-க்கு தகவல் அளிக்க வேண்டும். கூடுதலாக, ஃபெமா விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மீறப்பட்டால், கார்டுதாரர் குற்றச்சாட்டை சமாளிக்கக் கோரிக்கை செய்ய வேண்டியிருக்கும் மற்றும் என்ன மாதிரியான கேள்விகள் கேட்கப்படும் எனத் தெரிந்துக்கொள்ள இணைப்பைப் பார்க்கலாம்:
   - https://www.rbi.org.in/Scripts/NotificationUser.aspx?Id=12736&Mode=0
   - https://www.rbi.org.in/commonperson/English/Scripts/FAQs.aspx?Id=835#:~:text=Ans.,pleading%20guilty%20and%20seeking%20redressal.
4. வாடிக்கையாளர், $250,000 ஐ மீறி செய்யப்பட்ட எல்ஆர்எஸ் பரிவர்த்தனைத் தொகையை நாட்டிற்கு திரும்ப அனுப்ப பொறுப்பும் கடமையும் கொண்டுள்ளார். இதைப் பின்பற்ற தவறினால் ஆர்பிஐ தக்க நடவடிக்கையை எடுக்கும்.
5. மின்னணு/இணைய வர்த்தக போர்ட்டல்கள் மூலம் இந்தியாவுக்கு வெளியே எந்த வடிவத்திலும் வெளிநாட்டு நாணய வர்த்தகத்திற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு பணப் பரிமாற்றமும் செய்யக்கூடாது. இப்படியான பரிவர்த்தனைகளைச் செய்வது ஃபெமா விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு விரோதமானது மற்றும் கார்டுதாரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு உட்படுத்தும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும், மேலும் உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் (கேஒய்சி) விதிமுறைகள் / பணமோசடி தடுப்பு (ஏஎம்எல்) விதிமுறைகள் மற்றும் தரநிலைகளின் மீறலுக்கான பொறுப்பும் அவருக்கு உள்ளது.
6. வாடிக்கையாளர் டெபிட் கார்டுகளைப் பயன்படுத்தி மூலதனக் கணக்கு பரிவர்த்தனைகளை செய்யக்கூடாது.
7. வாடிக்கையாளர் ஓஎஃப்ஏசி / இயு / யுகே எச்எம்டி/ யுஎன் பொருளாதாரத் தடை விதிப்புகளுக்குட்பட்ட எந்த நிறுவனத்திற்கும் / நாட்டிற்கும் பணம் செலுத்தக்கூடாது.
8. ஃபெமா, 1999 இன் கீழ் தடைசெய்யப்பட்ட எந்த நோக்கத்திற்காகவும் பணம் செலுத்தக்கூடாது.
9. மருத்துவம் மற்றும் கல்வி நோக்கங்களுக்கான செயலிழந்த / பான்-ஆதார் இணைக்கப்படாத பரிவர்த்தனைகளுக்கு டிசிஎஸ் விகிதம் இரட்டிப்பாக கணக்கிடப்படும்.

### வணிக நிறுவனப் பயன்பாடு

1. மாஸ்டர் கார்டு / விசா / ரூபே லோகோவைக் காட்சிப்படுத்தும் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள வணிக நிறுவனங்களில் உள்ள அனைத்து மின்னணு பாயின்ட்-ஆஃப்-சேல் டெர்மினல்களிலும் கார்டு ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
2. கார்டு மின்னணு பயன்பாட்டிற்கு மட்டுமே மற்றும் மின்னணு பாயின்ட் ஆஃப் சேல் ஸ்வைப் டெர்மினலைக் கொண்ட வணிக நிறுவனங்களில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மின்னணு பயன்பாட்டைத் தவிர கார்டின் எந்தவொரு பயன்பாடும் அங்கீகரிக்கப்படாததாகக் கருதப்படும் மற்றும் அத்தகைய பரிவர்த்தனைகளுக்கு கார்டுதாரர் மட்டுமே பொறுப்பாவார். ரிசர்வ் பேங்க்கின் வழிகாட்டுதல்களின்படி, 01-12-2013 முதல், சில்லறை விற்பனை நிலையங்களிலும், வணிக நிறுவனங்களில் உள்ள மின்னணு

பாயின்ட் ஆஃப் சேல் (PoS) ஸ்வைப் டெர்மினல்களிலும் மேற்கொள்ளப்படும் அனைத்து டெபிட் கார்டு பரிவர்த்தனைகளையும் ஏற்கனவே உள்ள ATM PIN-ஐப் பயன்படுத்தி சரிபார்க்க வேண்டியிருக்கும்.

3. ஒரு வணிகர் உங்கள் டெபிட் கார்டை PoS இயந்திரத்தில் ஸ்வைப் செய்யும் போது அல்லது செருகும் போது, அவர் முதலில் தொகையை உள்ளிடுவார். பின்னர் PoS இயந்திரம் PIN-ஐக் கேட்கும், பரிவர்த்தனையை நிறைவு செய்ய நீங்கள் அதை உள்ளிட வேண்டும். இந்த PIN-ஐ நீங்கள் உள்ளிடவில்லை என்றால், ஆக்ஸிஸ் பேங்க் பரிவர்த்தனையை நிராகரிக்கும். சரியான PIN-ஐ உள்ளிட உங்களுக்கு மூன்று வாய்ப்புகள் கிடைக்கும். மூன்றாவது முயற்சியும் தவறாக இருந்தால், உங்கள் கார்டு தடுக்கப்படும். இது ATM-களில் உள்ள செயல்முறையைப் போன்றதாகும்.
4. வணிக நிறுவனத்தில் எப்போதும் டெபிட் கார்டு PIN-ஐ நீங்களே உள்ளிடவும். உங்கள் டெபிட் கார்டு PIN-ஐ வணிகர் உட்பட, யாருடனும் பகிர வேண்டாம். PoS-இயந்திரத்தில் உங்கள் கார்டைப் பயன்படுத்தும் போது, ஏதேனும் வழக்கத்திற்கு மாறாக இருப்பது போன்ற சந்தேகம் ஏற்பட்டால், அந்த இயந்திரத்தைப் பயன்படுத்த வேண்டாம், உடனடியாக அதை ஆக்ஸிஸ் பேங்க்குக்கு தெரிவிக்கவும். டெபிட் கார்டு பரிவர்த்தனைக்காக PIN -ஐப் பயன்படுத்துவது, இரண்டு-காரணி அங்கீகரித்தலாகச் செயல்படும் ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
5. குறிப்பிட்ட கணக்குகள் மற்றும் தொகைகளுக்கு எங்களால் குறிப்பாக அனுமதிக்கப்பட்டாலன்றி, POS-இல் டெபிட் கார்டைப் பயன்படுத்தி பணம் எடுப்பதை வங்கி தடை செய்துள்ளது.
6. கார்டுதாரர் ஏற்கனவே ஆக்ஸிஸ் பேங்க் டெபிட்/ ATM கார்டு வைத்திருந்தால், ஏதேனும் ஆக்ஸிஸ் பேங்க் ATM அல்லது மாஸ்டர் கார்டு/ விசா/ ரூபே ATM-இல் முதல் முறை அவர் PIN-ஐப் பயன்படுத்தி டெபிட் கார்டை ஏற்றுக்கொண்டால், பின்னர் அது ஆக்ஸிஸ் பேங்க்கால் செயலிழக்கச் செய்யப்படும்.
7. வணிக நிறுவனங்களில் கார்டைப் பயன்படுத்தும் போதெல்லாம் சார்ஜ் ஸ்லிப்பில் நீங்கள் கையொப்பமிட்டு, சார்ஜ் ஸ்லிப்பின் நகலை உங்களிடம் வைத்திருக்க வேண்டும். சார்ஜ் ஸ்லிப் நகல்களை ஆக்ஸிஸ் பேங்க் வழங்காது. உங்களால் அங்கீகரிக்கப்பட்டவை என நிரூபிக்கப்படக்கூடிய, ஆனால் நீங்கள் தனிப்பட்ட முறையில் கையொப்பமிடப்படாத எந்த சார்ஜ் ஸ்லிப்களும் உங்கள் பொறுப்பாகக் கருதப்படும்.
8. டெபிட் கார்டு உலகளவில் மின்னணு பாயின்ட்-ஆஃப்-சேல் டெர்மினல்களைக் கொண்ட அனைத்து மாஸ்டர் கார்டு/ விசா/ ரூபே வணிக விற்பனை நிலையங்களிலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கிடைக்கும் அல்லது வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவது உட்பட, ஆனால் அவை மட்டும் அல்லாமல் வணிகர் உங்களுடன் மேற்கொள்ளும் எந்தவொரு பரிவர்த்தனைக்கும் எந்தப் பொறுப்பையும் ஆக்ஸிஸ் பேங்க் ஏற்காது. எந்தவொரு மாஸ்டர் கார்டு/ விசா/ ரூபே வணிக நிறுவனம் தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் புகார் இருந்தால், அவற்றை அந்த வணிக நிறுவனத்துடன் தீர்த்துக் கொள்ள வேண்டும், அவ்வாறு செய்யத் தவறுவது ஆக்ஸிஸ் பேங்க்குக்கான எந்தக் கடமைகளிலிருந்தும் உங்களை விடுவிக்காது. கார்டு ஸ்வைப் செய்யப்பட்ட பிறகு பொருட்களை ஏற்காமல் வாங்குவதை ரத்து செய்ய நீங்கள் முடிவு செய்தால், வணிகர் உடனடியாக பரிவர்த்தனையை ரத்து செய்து, ஸ்லிப்பை உங்களிடம் ஒப்படைப்பதை உறுதிப்படுத்தவும். அதன்பிறகு செய்யப்படும் எந்தவொரு ரத்தும், பெறுகின்ற வங்கி மூலம் "சார்ஜ்பேக்" ஆக வணிகரிடம் அனுப்பப்படுவதுடன், அந்தச் செயல்முறையை முடிப்பதற்குத் தேவையான நேரத்தை எடுத்துக் கொள்ளும். முழு / பகுதியளவு தொகை திரும்ப வழங்கப்படுவதற்கு எந்த உத்தரவாதமும் இருக்க முடியாது. எந்தவொரு வணிக நிறுவனமும் பரிவர்த்தனைகளின் மதிப்பு/ செலவுக்கு மேல் விதித்து, பரிவர்த்தனைத் தொகையுடன் சேர்த்து உங்கள் கணக்கில் பற்று வைக்கின்ற எந்தவொரு கட்டணத்திற்கும் ஆக்ஸிஸ் பேங்க் பொறுப்பேற்காது.
9. பொருட்கள்/ சேவைகளை வாங்குவதும், அதைத் தொடர்ந்து ரத்துசெய்து வரவு வைப்பதும் இரண்டும் தனித்தனியான பரிவர்த்தனைகளாகும். வணிகரிடம் இருந்து பணம் திரும்பப் பெறப்பட்ட பிறகு மட்டுமே ரீஃபண்டு உங்கள் கணக்கில் (ரத்துக் கட்டணங்களைக் கழித்து) வரவு வைக்கப்படும். ரீஃபண்டு செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் உங்கள் கார்டு கணக்கில் அது வரவு வைக்கப்படவில்லை என்றால், வணிகரிடமிருந்து பெற்ற கிரெடிட் நோட்டின் நகலுடன் ஆக்ஸிஸ் பேங்க்கிற்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும். விரிவான செயல்முறைக்கு, https://www.axisbank.com/docs/default-source/default-document-library/grievance-redressal/grievance-redressal-policy.pdf, என்ற இணைப்பைப் பார்க்கவும்
10. ஒன்றுக்கு மேற்பட்ட பல கணக்குகளுடன் இணைக்கப்பட்ட கார்டுகளைப் பொறுத்தவரை, வணிக நிலையங்களில் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கு முதன்மைக் கணக்கில் மட்டுமே டெபிட் செய்யப்படும். மேற்கண்ட கணக்கில் போதுமான பணம் இல்லை என்றால், கார்டுடன் இணைக்கப்பட்ட பிற கணக்குகளில் ஒட்டுமொத்தமாகவோ அல்லது தனித்தனியாகவோ போதுமான பணம் இருந்தாலும்கூட ஆக்ஸிஸ் வங்கி பரிவர்த்தனைகளை அங்கீகரிக்காது.
11. ஹோட்டல்களில் செக்-இன் செய்யும் போதும், வாங்குதல் பரிவர்த்தனை அல்லது சேவையை முடிப்பதற்கு முன் பணம் செலுத்தும் பிற இடங்களிலும் கார்டைப் பயன்படுத்தக் கூடாது. அத்தகைய பரிவர்த்தனை செய்யப்பட்டால், உங்கள் நிதி தற்காலிகமாகத் தடுக்கப்படும் என்பதை நினைவில் கொள்ளவும்.
12. எந்தவொரு அஞ்சல்/ தொலைபேசி வாங்குதலுக்கும் கார்டு பயன்படுத்தப்படக் கூடாது, அத்தகைய பயன்பாடு அங்கீகரிக்கப்படாததாகக் கருதப்படும்.
13. டெபிட் கார்டுடன் கூடிய PMJDY கணக்குகள் மற்றும் கிசான் கிரெடிட் கார்டு கணக்குகள் தவிர, ரொக்கக் கடன்/கடன் கணக்குதாரர்களுக்கு டெபிட் கார்டு வழங்க முடியாது.
14. அனைத்து அங்கீகரிக்கப்படாத செயல்கள் மற்றும் பரிவர்த்தனைகளுக்கு கார்டுதாரர் மட்டுமே பொறுப்பாவார்.

## ATM பயன்பாடு

1. உலகெங்கும் உள்ள ஆக்ஸிஸ் பேங்க் ATM-கள் மற்றும் மாஸ்டர் கார்டு/ விசா/ ரூபே செயல்படுத்தப்பட்ட ATM-களில் இந்தக் கார்டு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.
2. இந்தியாவைத் தவிர மற்ற நாடுகளில் உள்ள மாஸ்டர் கார்டு/ விசா/ ரூபே செயல்படுத்தப்பட்ட ATM-களில் கார்டுதாரரால் மேற்கொள்ளப்படும் பணம் எடுத்தல் மற்றும் இருப்பு விசாரணை ஆகியவை நடைமுறையில் உள்ள கட்டணங்கள் பட்டியலுக்கேற்ப, கட்டணத்திற்கு உட்பட்டவையாகும். இந்தியாவில் உள்ள மாஸ்டர் கார்டு/ விசா/ ரூபே ATM-களில் (ஆக்ஸிஸ் பேங்க் அல்லாதவை) பணம் எடுத்தல் மற்றும் இருப்பு விசாரணை ஆகியவையும் (அவ்வப்போது ஆக்ஸிஸ் பேங்க் தீர்மானிக்கும்) கட்டணத்திற்கு உட்பட்டவையாக இருக்கலாம், அத்தகைய பணம் எடுத்தல் மற்றும் இருப்பு விசாரணை பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படும் நேரத்தில் கணக்கில் அது பற்று வைக்கப்படும். ஆக்ஸிஸ் பேங்க் அல்லாத ATM-களில் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பரிவர்த்தனைகளும், அவ்வப்போது ஆக்ஸிஸ் பேங்க் நிர்ணயிக்கும் கட்டணங்களுக்கு உட்பட்டவையாகும். ஆக்ஸிஸ் பேங்க் இணையதளத்தில் இந்தக் கட்டண அட்டவணை புதுப்பிக்கப்பட்டுள்ளது.
3. ஆக்ஸிஸ் பேங்க் ATM-இல் பணம் எடுத்தல், காசோலை/பண வைப்புகள், வைப்பு அல்லது பணம் எடுக்கும் போது ATM மூலம் வழங்கப்பட்ட எந்தவொரு அறிக்கை/ ரசீதானது, சரிபார்க்கப்பட்டு, வேறுவிதமாக ஆக்ஸிஸ் பேங்க்குக்குத் தெரிவிக்கப்படாத பட்சத்தில், இறுதியானதாகக் கருதப்படும். அத்தகைய சரிபார்ப்பு இறுதியானது மற்றும் முடிவானதாகும், இந்த சரிபார்க்கப்பட்ட தொகை கார்டுதாரரைக் கட்டுப்படுத்தும்.
4. ATM அல்லது கார்டின் ஏதேனும் செயலிழப்பு, தற்காலிக நிதிப் பற்றாக்குறை, பேங்க்கின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலையில் எழும் ஏதேனும் சர்ச்சை அல்லது பிற காரணங்களால் (நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ) ஏதேனும் சேவையை வழங்குவதில் ஏதேனும் தவறுதல் அல்லது அத்தகைய தவறுதலுக்குக் காரணமான ஏதேனும் கடமையைச் செய்யத் தவறினாலும் ஆக்ஸிஸ் பேங்க் பொறுப்பேற்காது.
5. கார்டு மற்றும் தொடர்புடைய PIN இழப்பால்/ பயன்பாட்டால் ஏற்படும் அல்லது அது தொடர்பான எந்தவொரு பின்விளைவு அல்லது மறைமுக இழப்பு அல்லது சேதத்திற்கு ஆக்ஸிஸ் பேங்க் பொறுப்பேற்காது.
6. கார்டு வழங்கப்பட்ட நாட்டைத் தவிர வேறு நாட்டில் ATM சேவைகள் கிடைப்பது, அந்த நாட்டில் நடைமுறையில் உள்ள உள்நாட்டு ஒழுங்குமுறைகளால் நிர்வகிக்கப்படும். முன்னறிவிப்பின்றி இந்த சேவைகள் திரும்பப் பெறப்பட்டால் அதற்கு ஆக்ஸிஸ் பேங்க் பொறுப்பேற்காது.
7. ஓவர் டிராஃப்ட் கணக்குகளுடன் இணைக்கப்பட்ட டெபிட் கார்டுகளில் பணம் எடுக்கும் வசதி கிடைக்காது.

கவனத்தில் கொள்ளவும்: ஆக்ஸிஸ் பேங்க் அல்லாத ATM-இல் இலவசப் பரிவர்த்தனையைப் பெறுவதற்கு, குறைந்தபட்சம் 1 வாங்குதல் பரிவர்த்தனைக்கு உங்கள் பிசினஸ் பிளாட்டினம் டெபிட் கார்டை நீங்கள் பயன்படுத்த வேண்டும்.

## கட்டணம் மற்றும் கட்டண விதிப்புகள்

1. பணம் எடுத்தல்/ இருப்பு விசாரணை மற்றும்/அல்லது பொருந்தக்கூடிய இடங்களில் விதிக்கப்படும் பரிவர்த்தனை கட்டணங்கள், பணம் எடுத்தல்/ இருப்பு விசாரணையை இடுகையிடும் போது அல்லது பொருந்தக்கூடிய நேரங்களில் கணக்கில் பற்று வைக்கப்படும்.
2. சேருவதற்கான கட்டணம், வழங்கல் கட்டணம், ஆண்டு உறுப்பினர் கட்டணம், மாற்றுதல் கட்டணம் பற்றிய விவரங்களுக்கு, https://www.axisbank.com/docs/default-source/default-document-library/cards/fees-and-charges-for-debit-card.pdfஎன்ற இணைப்பைப் பார்க்கவும்.
3. வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்படும் பரிவர்த்தனைகள் அனைத்தும் கார்டுதாரரின் வங்கி கணக்கு அறிக்கைகளில் இந்திய ரூபாயில் பில் செய்யப்படும். ஆக்ஸிஸ் பேங்க்/ மாஸ்டர் கார்டு/ விசா/ ரூபே அவ்வப்போது நிர்ணயிக்கும் விகிதங்களில் வெளிநாட்டு நாணயத்தில் ஏற்படும் கட்டணங்களை இந்திய ரூபாயாக மாற்றுவதற்கு, ஆக்ஸிஸ் பேங்க் மற்றும் மாஸ்டர் கார்டு/ விசா/ ரூபேவை இதன் மூலம் நீங்கள் அங்கீகரிக்கிறீர்கள்.
4. டெபிட் கார்டின் பயன்பாட்டிற்குப் பொருந்தக் கூடிய கட்டணங்கள்/ கட்டண விதிப்புகளை, கார்டுதாரருக்கு (கார்டுதாரர்களுக்கு) முன் அறிவிப்புடன், அவ்வப்போது ஆக்ஸிஸ் வங்கி திருத்தலாம்/ மாற்றலாம்.
5. வெளிநாட்டு நாணயத்தில் பணம் செலுத்துதல்: இந்திய ரூபாய் அல்லாத வேறு நாணயத்தில் பரிவர்த்தனையை மேற்கொள்ளும் போது, அந்தப் பரிவர்த்தனை இந்திய ரூபாயில் மாற்றப்படும். ஆக்ஸிஸ் பேங்க்கில் பரிவர்த்தனை செட்டில் செய்யப்பட்ட தேதியில் இந்த மாற்றம் நடைபெறும், இந்தத் தேதி பணப் பரிமாற்றம் செய்யப்பட்ட அதே தேதியாக இல்லாமல் இருக்கலாம். பரிவர்த்தனை அமெரிக்க டாலரில் மேற்கொள்ளப்படவில்லை என்றால், விதிக்கப்படும் தொகையை அமெரிக்க டாலராக மாற்றி, பின்னர் அமெரிக்க டாலர் தொகையை இந்திய ரூபாயாக மாற்றுவதன் மூலம் அமெரிக்க டாலர் மூலமாக இந்த மாற்றம் மேற்கொள்ளப்படும். அத்தகைய பரிவர்த்தனைகளில், செட்டில்மெண்ட் தேதியில் நாணய மாற்றக் காரணி மதிப்பீட்டால் (தற்போது 3.50%) அதிகரிக்கலாம் என்பதால், பொருந்தக்கூடிய சட்டத்தின்படி ஒரு குறிப்பிட்ட விகிதம் தேவைப்பட்டாலன்றி, அமெரிக்க டாலரில் இருந்து இந்திய ரூபாயாக மாற்றும் விகிதமானது, விசா/ மாஸ்டர் கார்டு வழங்குகின்ற விகிதத்தில் இருக்கும்.
6. வாடிக்கையாளரால் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய வெளிநாட்டு பரிவர்த்தனையின் ரீஃபண்டுக்கு கூடுதலாக 3.5% கட்டணம் விதிக்கப்படும்.
7. டைனமிக் நாணய மாற்ற மார்க்-அப்: DCC மூலம், இந்திய நாணயத்தைப் பயன்படுத்தி ஒரு வாடிக்கையாளர் சர்வதேசப் பரிவர்த்தனையை மேற்கொள்ளலாம். இருப்பினும், ஒரு வெளிநாட்டு வணிகருக்கு Iஇந்திய ரூபாயில் பணம் செலுத்தும் போது, அந்தப் பரிவர்த்தனை தொகைக்கு DCC மார்க்-அப் கட்டணமாக 1% உடன் வரிகள் விதிக்கப்படும். DCC என்பது, POS அல்லது ஆன்லைன் மூலமாக சர்வதேச இடத்திலோ அல்லது இந்தியாவில் இருக்கும் ஆனால் வெளிநாட்டில் பதிவுசெய்யப்பட்ட வணிகரிடமோ மேற்கொள்ளப்படும் சர்வதேச பரிவர்த்தனைகளுக்குப் பொருந்தும். எடுத்துக்காட்டு - நீங்கள் ஒரு சர்வதேச நாட்டில் உள்ள கடையில் கொள்முதல் செய்து, உங்கள் ஆக்ஸிஸ் பேங்க் டெபிட் கார்டைப் பயன்படுத்தி POS இயந்திரத்தில் இந்திய ரூபாயில் பணம் செலுத்தினால், அந்தப் பரிவர்த்தனை தொகைக்கு DCC மார்க்-அப் கட்டணம் 1% உடன் வரிகள் விதிக்கப்படும். அதே போன்று, வெளிநாட்டில் பதிவுசெய்யப்பட்ட ஒரு வணிகரிடமிருந்து இந்தியாவில் நீங்கள் கொள்முதல் செய்து, உங்கள் ஆக்ஸிஸ் பேங்க் டெபிட் கார்டைப் பயன்படுத்தி இந்திய ரூபாயில் பணம் செலுத்தும் பட்சத்தில், அந்தப் பரிவர்த்தனை தொகைக்கு DCC மார்க்-அப் கட்டணம் 1% உடன் வரிகள் விதிக்கப்படும்.

## டெபிட் கார்டில் உள்ள அம்சங்கள்

உங்கள் டெபிட் கார்டில் பல்வேறு அம்சங்களை வழங்குவதற்காக வங்கி, அவ்வப்போது, அதன் சுயாதீன விருப்பப்படி, பல்வேறு முகமைகளுடன் இணைந்து செயல்படலாம். ஏதேனும் சேவை வழங்குநர்கள்/ வணிகர்கள்/ விற்பனை நிலையங்கள்/ முகமைகளால் வழங்கப்படும் ஏதேனும் தயாரிப்புகள் அல்லது PIN சேவைகளின் செயல்திறன், பயன் ஆகியவற்றிற்கு வங்கி உத்தரவாதம் அளிக்காது அல்லது உறுதியளிக்காது. முரண்பாடுகள் (ஏதேனும் இருந்தால்) வங்கியைத் தொடர்புபடுத்தாமல் நேரடியாக அந்த வணிகர் / முகமை போன்றவற்றுக்கு கொண்டு செல்ல வேண்டும்.

## அங்கீகரிக்கப்படாத மின்னணு வங்கிப் பரிவர்த்தனைகள்

ஏதேனும் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைக்கு வங்கி அல்லது வாடிக்கையாளரின் பொறுப்பு:

1. வாடிக்கையாளரின் பூஜ்ஜியப் பொறுப்பு - பின்வரும் முறையில் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை நிகழும்போது வாடிக்கையாளரின் பூஜ்ஜியப் பொறுப்புக்கான உரிமை தோன்றும்:
    a. பேங்க்கின் பங்களிப்புடனான மோசடி/ அலட்சியம்/ குறைபாடு (பரிவர்த்தனை வாடிக்கையாளரால் தெரிவிக்கப்பட்டதா, இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல்)
    b. குறைபாடு வங்கியிடமோ அல்லது வாடிக்கையாளரிடமோ இல்லாமல், கணினியில் வேறு எங்கோ ஏற்பட்டு, அந்த அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை தொடர்பாக வங்கியிடமிருந்து தகவலைப் பெற்ற மூன்று வேலை நாட்களுக்குள் வாடிக்கையாளர் பேங்க்குக்கு அறிவிக்கின்ற.மூன்றாம் தரப்பு மீறல்.
2. வாடிக்கையாளரின் வரையறுக்கப்பட்ட பொறுப்பு- பின்வரும் நிகழ்வுகளில் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் காரணமாக ஏற்படும் இழப்புக்கு வாடிக்கையாளர் பொறுப்பாவார்:
    a. வாடிக்கையாளர் பேமெண்ட் செய்வதற்கான விவரங்களை மற்றவருடன் பகிர்ந்து கொள்வது போன்ற, அவரது அலட்சியத்தால் இழப்பு ஏற்படும் நிகழ்வுகளில், அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனையை வாடிக்கையாளர் பேங்க்குக்குத் தெரிவிக்கும் வரை அவர் முழு இழப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை குறித்து தெரிவிக்கப்பட்ட பிறகு ஏற்படும் எந்த இழப்பும் வங்கியால் ஏற்றுக் கொள்ளப்படும்.
    b. அங்கீகரிக்கப்படாத மின்னணு வங்கிப் பரிவர்த்தனைக்கான பொறுப்பு வங்கியிடமோ அல்லது வாடிக்கையாளரிடமோ இல்லாமல், கணினியில் வேறு எங்கோ இருந்து, அத்தகைய பரிவர்த்தனையை பேங்க்குக்கு அறிவிப்பதில் வாடிக்கையாளர் தரப்பில் தாமதம் (பேங்க்கில் இருந்து தகவலைப் பெற்ற ஏழு வேலை நாட்கள் வரை) ஏற்படும் நிகழ்வுகளில், வாடிக்கையாளரின் பரிவர்த்தனைக்கான பொறுப்பானது, அந்தப் பரிவர்த்தனையின் மதிப்பு அல்லது ₹10,000/- இதில் எது குறைவோ அதற்கு வரையறுக்கப்பட்டு இருக்கும்.
3. சரியான மொபைல் எண்களை வழங்காத வாடிக்கையாளர்களுக்கு, ATM-களில் பணம் எடுப்பதைத் தவிர, மின்னணு பரிவர்த்தனை வசதியை வங்கி வழங்காது.

அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனை குறித்து வங்கியிடமிருந்து தகவலைப் பெற்ற ஏழு வேலை நாட்களுக்குப் பிறகு வாடிக்கையாளர் பேங்க்குக்குத் தெரிவிக்கும் பட்சத்தில், பேங்க்கின் இயக்குநர் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையின்படி வாடிக்கையாளரின் பொறுப்பு தீர்மானிக்கப்படும். அதை பேங்க்கின் இயக்குனர் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையின்படி பேங்க் மதிப்பீடு செய்து, தீர்மானிக்க வேண்டும்.

மேல் முறையீட்டு விவரங்களுக்கு, ஆக்ஸிஸ் பேங்க்கின் இணையதளத்தை (www.axisbank.com) பார்வையிட்டு, பேங்க்கின் குறை தீர்க்கும் கொள்கையைப் பார்க்கவும் அல்லது உங்கள் அருகிலுள்ள ஆக்ஸிஸ் பேங்க் கிளையை அணுகவும்.

## விவரங்களை வெளியிடுதல்

1. ஆக்ஸிஸ் பேங்க் கோரும் போது, ஆக்ஸிஸ் பேங்க் அவசியமாகக் கருதும் எந்தவொரு விஷயத்திற்கும் தொடர்புடைய ஏதேனும் தகவல், பதிவுகள் அல்லது சான்றிதழ்களை நீங்கள் வழங்க வேண்டும். எந்த வழிகளில் அல்லது எந்த மூலத்திலிருந்து தேவை என்று கருதினாலும், அளிக்கப்பட்ட தகவலின் உண்மைத்தன்மையை சரிபார்க்க ஆக்ஸிஸ் பேங்க்-க்கு நீங்கள் அங்கீகாரம் வழங்குவீர்கள். விவரங்களை வழங்காவிட்டால் அல்லது அவை தவறு எனக் கண்டறியப்பட்டால், ஆக்ஸிஸ் பேங்க், தனது சுயாதீன விருப்பப்படி, கார்டைப் புதுப்பிக்க மறுக்கலாம் அல்லது கார்டை உடனடியாக ரத்து செய்யலாம்.
2. தகுதிவாய்ந்த அதிகார வரம்பில் உள்ள எந்தவொரு நீதிமன்றம், பகுதியளவு-நீதித்துறை அதிகாரிகள், சட்ட அமலாக்க முகமைகள் மற்றும் மத்திய அரசு அல்லது மாநில அரசின் பிற பிரிவுகளுக்கு வாடிக்கையாளரின் விவரங்களை வெளியிடும் உரிமை ஆக்ஸிஸ் பேங்க்கிற்கு உள்ளது.
3. எந்தவொரு மின்னணு நிதி பரிமாற்ற நெட்வொர்க்கிலும் தனது பங்கேற்புடன், அவசியமாக அல்லது பொருத்தமாக இருக்கக் கூடிய, தொடர்புடைய கார்டுதாரரின் கணக்கு தொடர்பான தகவல்களை கடுமையான நம்பிக்கையுடன் மற்ற நிறுவனத்திற்கு வெளிப்படுத்தும் உரிமையை ஆக்ஸிஸ் பேங்க் கொண்டுள்ளது.
4. அடிப்படை பயண ஒதுக்கீடு/ இதர அனுமதிக்கப்பட்ட உரிமைகளை கார்டுதாரர் தாண்டவில்லை என்பதையும், அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம், 1999 ஐ மீறவில்லை என்பதையும் உறுதிப்படுத்துவதற்காக, தனது கார்டுதாரர் வெளிநாட்டு நாணயங்களில் மேற்கொள்ளும் செலவினங்களை ரிசர்வ் வங்கியிடம் தெரிவிக்கும் உரிமையை ஆக்ஸிஸ் பேங்க் கொண்டுள்ளது.

## கார்டு தொலைந்து போதல் அல்லது திருடப்படுதல்

1. கார்டு தொலைந்து போகும் அல்லது திருடு போகும் பட்சத்தில், அவசரகாலத் தொடர்பு எண்ணில் இந்தியாவில் உள்ள ஆக்ஸிஸ் பேங்க்கின் ஏதேனும் அலுவலகத்திற்கோ அல்லது வெளிநாட்டில் இருக்கும் மாஸ்டர்கார்டு/ விசா/ ரூபே குளோபல் சர்வீஸ் சென்டர்களின் ஹெல்ப்லைன்களிலோ தகவல் தெரிவிக்க வேண்டும். பின்வரும் சேனல்களில் எதையேனும் பயன்படுத்தி உங்கள் கார்டைத் தடுக்கலாம்.
    - “BLOCKCARD” என்று SMS செய்து 5676782 அல்லது +91 9717000002 என்ற எண்ணிற்கு அனுப்பவும்
    - வாடிக்கையாளருக்கு உதவக் கூடிய வாடிக்கையாளர் பிரதிநிதியுடன் பேச. அவசர உதவி எண்+91-22-67987700-ஐ அழைக்கவும்.
    - உங்கள் இன்டர்நெட் பேங்கிங் கணக்கில் உள்நுழைந்து, டெபிட் கார்டு பிரிவில் உள்ள "கார்டைத் தடுக்கவும்" விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கவும்
    - ஆக்ஸிஸ் வங்கி செயலி ஓபன்-ஐ லாகின் செய்யவும். வங்கி>சேவைகள்>டெபிட் கார்டுகள்> பிளாக் & ரீப்ளேஸ்-க்கு வருகைத்தருதல்
2. டெபிட் கார்டு தொலைந்துபோனால் அல்லது திருடுபோனால் அது குறித்து உடனடியாக ஆக்ஸிஸ் வங்கிக்கு புகார் அளிக்க வேண்டும். 24 மணி நேர அவசர உதவி எண்ணின் மூலம் தொலைந்துபோனதை அல்லது திருடுபோனதைப் பதிவு செய்யலாம் என்றாலும்கூட, அதே விவரங்களை ஆக்ஸிஸ் வங்கி கிளை அல்லது அல்லது மின்னஞ்சல் முகவரி, வங்கி சப்போர்ட்டுக்கு விரைவில் எழுத்துப்பூர்வமாக தெரியப்படுத்த வேண்டும். அவ்வாறு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கும்போது, காவல் துறையிடம் பதிவு செய்யப்பட்ட புகாரின் நகலையும் இணைக்க வேண்டும்.
3. கார்டு தொலைந்து அல்லது திருடப்பட்ட பிறகு, ஆனால் உங்கள் எழுத்துப்பூர்வ உறுதிப்படுத்தலைப் பெறுவதற்கு முன் பரிவர்த்தனைகள் ஆக்ஸிஸ் பேங்க்கால் பெறப்பட்டால், உங்கள் கணக்கில் (கணக்குகளில்) பற்று வைக்கப்பட்ட அனைத்துத் தொகைகளுக்கும் நீங்கள் பொறுப்பாவீர்கள். இருப்பினும், எழுத்துப்பூர்வ உறுதிப்படுத்தலைப் பெறுவதற்கு முன்பு, கார்டு பாதுகாக்கப்பட்டது, இழப்பு/திருட்டு உடனடியாகப் புகாரளிக்கப்பட்டு, நீங்கள் நல்லெண்ணத்துடனும் நியாயமான அக்கறையுடனும் விடாமுயற்சியுடனும் செயல்பட்டீர்கள் என்று நிரூபிக்கப்பட்டால், வாங்குதல் பரிவர்த்தனைகளுக்கான உங்கள் இழந்த கார்டு பொறுப்பு குறிப்பிட்ட வரம்பு வரை (எழுத்துப்பூர்வமாக இழப்பு புகாரளிக்கப்பட்டவுடன்) காப்பீடு செய்யப்படும். ATM-களில் மேற்கொள்ளப்பட்ட பணம் எடுத்தல்கள் பரிவர்த்தனைகளுக்கு உங்களுக்கு மட்டுமே இரகசியமான PIN-ஐப் பயன்படுத்த வேண்டும் என்பதால், அவற்றுக்கு அத்தகைய பாதுகாப்பு எதுவும் வழங்கப்படாது.
4. கார்டு தொலைந்து ஆக்ஸிஸ் பேங்க்கிற்கு தெரிவிக்கப்படாத அல்லது கார்டு தொலைந்து ஆக்ஸிஸ் பேங்க்கிற்கு தெரிவிக்கப்படும் முன் தவறாகப் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில், கார்டு இழப்பு அல்லது தவறாகப் பயன்படுத்தப்படுவதால் ஏற்படக்கூடிய எந்தவொரு இழப்பு, செலவு, செலவுகள் அல்லது சேதங்களுக்கான எந்தவொரு பொறுப்பிலிருந்தும் இதன் மூலம் ஆக்ஸிஸ் பேங்க்கை நீங்கள் விடுவிக்கிறீர்கள்.
5. நீங்கள் அனைத்து வகையிலும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கியிருந்தால், பொருந்தக்கூடிய கட்டணத்தில் ஆக்ஸிஸ் பேங்க்கின் சுயாதீன விருப்பத்தின் பேரில் மாற்று கார்டு வழங்கப்படலாம்.
6. பின்னர் உங்கள் பழைய கார்டு மீண்டும் கிடைத்தால், அதைப் பயன்படுத்த முடியாது. அந்தக் கார்டை காந்தப் பட்டையின் குறுக்கே பல துண்டுகளாக வெட்டி, அழித்து விடவும்.

## காப்பீடு

1. நடைமுறையில் உள்ள சம்பந்தப்பட்ட காப்பீட்டுக் கொள்கையின் விதிமுறைகளின்படியும், உங்கள் கணக்கு நடத்தை திருப்திகரமாக இருந்து, ஆக்ஸிஸ் பேங்க்கின் செயலில் உள்ள கார்டுதாரராக நீங்கள் இருக்கும் வரையிலும் மட்டுமே கார்டில் வழங்கப்படும் காப்பீட்டுப் பலன் உங்களுக்குக் கிடைக்கும் என்பதையும், ஏதேனும் காரணத்திற்காக கார்டு மற்றும்/அல்லது கணக்கு வசதி நிறுத்தப்படும் பட்சத்தில், அத்தகைய காப்பீட்டுத் திட்டத்தின் பலன் கிடைப்பது தானாகவே, உறுப்பினர் தகுதி நிறுத்தப்பட்ட தேதியிலிருந்து நிறுத்தப்படும் என்பதையும் நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள்.
2. எந்த நேரத்திலும் வழங்கப்படும் காப்பீட்டு வசதியை நிறுத்துவதற்கான உரிமை ஆக்ஸிஸ் பேங்க்குக்கு உள்ளது. அத்தகைய சந்தர்ப்பத்தில், கார்டுதாரர்களுக்கு கட்-ஆஃப் தேதி குறித்து தெரிவிக்கப்படும். இந்த சந்தர்ப்பத்தில் ஆக்ஸிஸ் பேங்க்கின் முடிவே இறுதியானது.
3. பூஜ்ஜிய இழப்பு கார்டு பொறுப்பு/ வாங்குதல் பாதுகாப்பு/ தனிப்பட்ட விபத்து (மரணத்திற்கான காப்பீடு மட்டும்) காப்பீடு கார்டுதாரர்களுக்கு நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (அல்லது ஆக்ஸிஸ் பேங்க் அவ்வப்போது அடையாளம் காணக்கூடிய பிற பொது காப்பீட்டு நிறுவனம்) மூலம் வழங்கப்படும். ஆக்ஸிஸ் வங்கி பொறுப்பேற்காத அவர்களுடைய விதிமுறைகளும், நிபந்தனைகளும், முடிவுகளும் பொருந்தும்.
4. நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (அல்லது ஆக்ஸிஸ் பேங்க் அடையாளம் காணக்கூடிய பிற பொது காப்பீட்டு நிறுவனம்) மூலம் வழங்கப்படும் காப்பீட்டின் தரம், பாதுகாப்பு வழங்குதல், உரிமைக்கோரல் செயலாக்கம் அல்லது செட்டில்மெண்ட் குறித்து ஆக்ஸிஸ் பேங்க் எந்த விதத்திலும், எந்த உத்தரவாதத்தையும் வழங்கவில்லை மற்றும்/அல்லது அதற்கு பிரதிநிதித்துவம் செய்யவில்லை.
5. நிகழ்வின் தேவைகளுக்கேற்ப, கூடுதல் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்படி உங்களிடம் கேட்கப்படலாம். எந்தவொரு தாமதமான உரிமைக்கோரல் செட்டில்மெண்ட்டிற்கும் ஆக்ஸிஸ் பேங்க் பொறுப்பாகாது.
6. காப்பீட்டுக் கொள்கையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப, தனிநபர் விபத்துக் காப்பீட்டிற்கு உரிமை கோருவதற்கு, வாடிக்கையாளர் இறந்த நாளிலிருந்து 50 நாட்களுக்குள் தகவல் தெரிவித்து, தேவையான ஆவணச் சமர்ப்பிப்பை நிறைவு செய்ய வேண்டும்.
7. தனிப்பட்ட விபத்துக் காப்பீட்டிற்குத் தகுதிபெற, கடந்த 90 நாட்களில் வாடிக்கையாளர் குறைந்தபட்சம் ஒரு POS பரிவர்த்தனையை மேற்கொண்டிருக்க வேண்டும். இது மரணத்திற்கான காப்பீடு மட்டுமே, வேறு எந்த மருத்துவப் பிரச்சினைகளுக்கும் காப்பீடு

வழங்கப்படாது. இயற்கையான காரணங்களால் ஏற்படும் மரணமும் இந்த கார்டு காப்பீட்டிற்குள் அடங்காது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

8. ரூபே கார்டுகளுக்கான தனிநபர் விபத்துக் காப்பீட்டுக் கோரிக்கைகளை 30 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும் மற்றும் செல்லுபடியாகும் நிதி/ நிதி அல்லாத பரிவர்த்தனைக்கு 45 நாட்களுக்குள் டெபிட் கார்டை ஒருமுறை பயன்படுத்த வேண்டும்.
9. கார்டு இழப்பு, திருட்டு அல்லது நகலெடுக்கப்பட்டதை பேங்க்குக்குத் தெரிவிக்கும் நேரம் வரையில் ஏற்பட்ட இழப்பை கார்டுதாரர் ஏற்க வேண்டும், ஆனால், கார்டுதாரர் மோசடியாக, தெரிந்தோ அல்லது மிகுந்த அலட்சியத்துடனோ செயல்பட்டிருந்தால் தவிர, பயன்பாட்டு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைந்த கார்டு பொறுப்பு லிமிட்டிற்கேற்ப குறிப்பிட்ட லிமிட் வரை மட்டுமே ஏற்க வேண்டும்.
10. கொள்கை, விலக்குகள் மற்றும் உரிமைக்கோரல் செட்டில்மெண்ட்கள் தொடர்பான கூடுதல் கேள்விகள் அல்லது உதவிகளுக்கு, அனுப்ப வேண்டிய முகவரி:

    தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், D.0 112700, 22, 2வது தளம், மிட்டல் சேம்பர்ஸ், நாரிமன் பாயின்ட், மும்பை - 400 021
11. கிடைக்கக்கூடிய காப்பீட்டுப் பாதுகாப்பானது, பொருந்தக்கூடிய இடங்களில் உங்கள் கார்டு வகையைப் பொறுத்தது. விவரங்களுக்கு, https://www.axisbank.com/retail/cards/debit-cards,-இல் மேலும் ஆராயவும் என்ற விருப்பத்தின் கீழ் உங்கள் கார்டு வகைக்கேற்ப பார்க்கவும்.
12. உரிமைகோரல் செயல்முறைக்கு, பின்வரும் இணைப்பைப் பார்க்கவும் - https://www.axisbank.com/docs/default-source/default-document-library/insurance/terms-and-conditions-for-insurance.pdf

## அறிக்கை மற்றும் பதிவுகள்

1. ஆக்ஸிஸ் பேங்க் அனுப்பிய கணக்கு அறிக்கையில் கார்டு பரிவர்த்தனைகளின் பதிவுகள் கிடைக்கும். அந்தக் கணக்கு அறிக்கைகள் கார்டுதாரரால் குறிப்பிடப்பட்ட பதிவில் உள்ள முதன்மைக் கணக்குடன் தொடர்புடைய அஞ்சல் முகவரிக்கு, குறிப்பிட்ட கால இடைவெளியில் கார்டுதாரருக்கு அனுப்பப்படும். ஆக்ஸிஸ் பேங்க்கின் தொலைபேசி வங்கிச் சேவையை அழைப்பதன் மூலமோ அல்லது ஆக்ஸிஸ் பேங்க் ATM-களில் மினி ஸ்டேட்மெண்ட் வசதியைப் பயன்படுத்தியோ கார்டுதாரர் தனது பரிவர்த்தனைகளின் விவரங்களை பெறலாம். ஆக்ஸிஸ் பேங்க் வழங்கும் இன்டர்நெட் பேங்கிங் சேவையான ஐகனெக்ட்™ஐப் பயன்படுத்தி கார்டுதாரர் தனது அறிக்கையை ஆன்லைனில் பார்க்கலாம். ஐகனெக்ட்™-ஐப் பெறுவதற்கு, கார்டுதாரர் ஆக்ஸிஸ் பேங்க் கிளைகளில் கிடைக்கும் ஒரு தனியான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து, ஆக்ஸிஸ் பேங்க் கிளையில் சமர்ப்பிக்க வேண்டும்.
2. கார்டைப் பயன்படுத்தி செயலாக்கப்பட்ட பரிவர்த்தனைகளின் ஆக்ஸிஸ் பேங்க்கின் பதிவு முடிவானதாகவும் அனைத்து நோக்கங்களுக்காகவும் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும்.

## சர்ச்சைகள்

1. வாங்குதல் பரிவர்த்தனைகளின் போது, அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் கார்டு எண்ணுடன் சேர்த்து, கார்டுதாரரின் விற்பனை ஸ்லிப்பானது, கார்டுதாரரால் ஏற்படும் பொறுப்பின் அளவு குறித்து ஆக்ஸிஸ் பேங்க்குக்கும், கார்டு வைத்திருப்பவருக்கும் இடையே இறுதியான ஆதாரமாக இருக்கும். கார்டுதாரரால் வாங்கப்பட்ட பொருட்களை/ பெற்ற சேவைகளை கார்டுதாரர் திருப்தியுடன் பெற்றுள்ளார் என்பதை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் ஆக்ஸிஸ் பேங்கிற்கு இல்லை.
2. கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருந்தக்கூடிய கட்டணத்துடன் அல்லது கருத்து வேறுபாடு அறிவிப்பு கிடைத்த இரண்டு மாதங்களுக்குள் வாடிக்கையாளர் தீர்மானிக்கும் பாதிக்கப்பட்ட கார்டுதாரரின் கருத்து வேறுபாட்டைத் தீர்க்க நேர்மையான மற்றும் நியாயமான முயற்சிகளை ஆக்ஸிஸ் பேங்க் மேற்கொள்ளும். அத்தகைய முயற்சிகளுக்குப் பிறகு ஆக்ஸிஸ் பேங்க் அந்தக் கட்டணம் தவறானது எனத் தீர்மானித்தால், அதை கார்டுதாரருக்குத் தெரிவிக்கும்.
3. ஏதேனும் நிறுவனம் கார்டை ஏற்க மறு[ப்பதற்கு ஆக்ஸிஸ் பேங்க் எந்தப் பொறுப்பையும் ஏற்காது.
4. இந்த ஒப்பந்தம் இந்திய சட்டங்களுக்கு இணங்கவும் மற்றும் அவற்றாலும் நிர்வகிக்கப்படும். வேறு ஏதேனும் நீதிமன்றமும் இந்த விஷயத்தில் அதிகார வரம்பைக் கொண்டிருக்குமா என்பதைப் பொருட்படுத்தாமல், அனைத்துச் சர்ச்சைகளும் இந்தியாவில் உள்ள மும்பை நீதிமன்றங்களின் பிரத்யேக அதிகார வரம்பிற்கு உட்பட்டவையாகும்.
5. நிலுவைத் தொகைகள், சட்டரீதியான செலவுகள் (விவகாரத்தை ஏதேனும் முகவரிடம் குறிப்பிடுவது அவசியமானால்) அல்லது சர்ச்சையைத் தீர்ப்பதில் சட்டப்பூர்வ ஆதாரங்கள் பயன்படுத்தப்பட்டால் அது தொடர்பான அனைத்துச் செலவுகளுக்கும் கார்டுதாரரே பொறுப்பாவார்.
6. பேங்க்கின் கட்டுப்பாட்டிற்குள் நேரடியாகக் கணினிச் செயலிழப்பு காரணமாக கார்டுதாரருக்கு ஏற்படும் நேரடி இழப்புகளுக்கு வங்கி பொறுப்பேற்கும். இருப்பினும், அதன் நியாயமான கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பேமெண்ட் முறையின் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஏற்படும் எந்த இழப்புக்கும் வங்கி பொறுப்பேற்காது. மேலும், சாதனத்தின் டிஸ்பிளேயில் உள்ள செய்தியின் மூலம் அல்லது வேறுவிதமாக அறியப்பட்டால், கணினியின் செயலிழப்பு கார்டுதாரருக்கு அடையாளம் காணக்கூடியதாக இருந்தால். பரிவர்த்தனையை செயல்படுத்தாதது அல்லது குறைபாடுள்ள செயல்பாட்டிற்கான பேங்க்கின் பொறுப்பு, இந்த விதிமுறைகளை நிர்வகிக்கும் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு அசல் தொகை மற்றும் வட்டி இழப்பு ஆகியவற்றிற்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

## பொதுவானவை

1. உங்கள் வேலை மற்றும்/அல்லது அலுவலகம் மற்றும்/அல்லது குடியிருப்பு முகவரி மற்றும் தொலைபேசி எண்களில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், உடனடியாக நீங்கள் ஆக்ஸிஸ் பேங்க்குக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிப்பீர்கள்.
2. கார்டுதாரருக்கு 30 நாட்கள் அறிவிப்புடன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், கொள்கைகள், அம்சங்கள் மற்றும் பலன்களில் எதையேனும் சேர்க்க, நீக்க அல்லது மாற்றுவதற்கான உரிமையை ஆக்ஸிஸ் பேங்க் கொண்டுள்ளது. 30 நாள் அறிவிப்பு காலத்திற்குள் திரும்பப் பெறத் தவறினால், திருத்தப்பட்ட விதிமுறைகளை கார்டுதாரர் ஏற்றுக் கொண்டதாகக் கருதப்படும்.
3. இதன் கீழ் அஞ்சல் மூலம் அனுப்பப்படும் எந்தவொரு அறிவிப்பும், கார்டுதாரரால் ஆக்ஸிஸ் பேங்க்குக்கு எழுத்துப்பூர்வமாக கடைசியாக வழங்கப்பட்ட முகவரிக்கு அறிவிப்பு அனுப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் கார்டுதாரரால் பெறப்பட்டதாகக் கருதப்படும். ஆக்ஸிஸ் பேங்க் பொருத்தமானதாகக் கருதும் வழிகளில் மாற்றங்களை வெளியிடுவது, கார்டுதாரருக்கு செயல்பாட்டில் உள்ள அறிவிப்பை வழங்கியதாக அமையும்.
4. கணக்குதாரர், கார்டைப் பயன்படுத்துவதன் மூலம், இருக்கும் இருப்பு அல்லது ஆக்ஸிஸ் பேங்க்கால் அனுமதிக்கப்பட்ட ஓவர் டிராஃப்ட் லிமிட்டை விட அதிகமான தொகையை எடுக்கும் பட்சத்தில், கணக்குதாரர் ஆக்ஸிஸ் பேங்க்கால் நிர்ணயிக்கப்படும் விகிதத்தில் எடுக்கப்பட்ட மொத்த தொகைக்கும் நிபந்தனையின்றி வட்டி மற்றும் அபராதம், ஏதேனும் இருந்தால், ஆக்ஸிஸ் பேங்கிற்கு செலுத்துவார். இருப்பினும் இதை, ஏதேனும் ஓவர் டிராஃப்ட் வசதியை வழங்குவதற்கு ஆக்ஸிஸ் பேங்க் கடமைப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்துகின்ற அல்லது மறைமுகமான ஒரு ஒப்பந்தமாக கருதக் கூடாது.
5. கார்டுதாரருக்குத் தள்ளுபடிகள் போன்ற நன்மைகளை வழங்கும் மூன்றாம் தரப்பினரின் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம் குறித்து ஆக்ஸிஸ் பேங்க் எந்தப் பிரதிநிதித்துவத்தையும் அளிக்கவில்லை. சேவையில் ஏதேனும் குறைபாடு இருந்தால் அல்லது திருப்திகரமாக இல்லை என்றால் ஆக்ஸிஸ் பேங்க் பொறுப்பேற்காது.
6. டெபிட் கார்டு தொடர்பான அனைத்து விஷயங்களிலும், பேங்க்கின் முடிவே இறுதியானது மற்றும் அனைத்து விதத்திலும் கட்டுப்படுத்தும்.
7. டெபிட் கார்டைப் பயன்படுத்திக் கொள்ளும் நல்ல நிலையில் உள்ள எந்தவொரு நபரும் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் படித்து, புரிந்துகொண்டு, ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படுவார்.

## நிறுத்துதல்

1. முன் அறிவிப்பின்றி, எந்த காரணமும் தெரிவிக்காமல், எந்த நேரத்திலும் கார்டை ரத்து செய்வதற்கான/ திரும்பப் பெறுவதற்கான உரிமை ஆக்ஸிஸ் பேங்கிற்கு உள்ளது.
2. ஆக்ஸிஸ் பேங்க்கில் உள்ள தனது கணக்கை மூடுவதற்கு கார்டுதாரர் முடிவு செய்தால், முதன்மைக் கணக்கு தானாகவே ரத்து செய்யப்படும் என்பதால், அந்தக் கணக்குடன் வழங்கப்பட்ட கார்டு(கள்) தானாகவே ரத்து செய்யப்படும். உடனடியாகக் கார்டுதாரர்(கள்) தனது(தங்கள்) கார்டைப் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டு, அந்தக் கணக்குடன் இணைக்கப்பட்டுள்ள அவருடைய அனைத்து/ கூடுதல் கார்டுகளையும் அழித்து விட்டுத் திருப்பித் தர வேண்டும். கணக்கில் இன்னும் பற்று வைக்கப்படாமல் ஏதேனும் நிலுவையில் உள்ள கார்டு பரிவர்த்தனைகள் இருந்தால், ஆக்ஸிஸ் பேங்க் அவருக்கு நிதியைத் திருப்பித் தருவதற்கு முன், அது நிகரமாகக் கழிக்கப்படும்.
3. டெபிட் கார்டைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்கு கார்டுதாரர் முடிவு செய்தால், உங்களின் சம்பந்தப்பட்ட ஆக்ஸிஸ் பேங்க்க் கிளையில் 7 நாட்களுக்குக் குறையாமல் ஆக்ஸிஸ் பேங்க்குக்கு கார்டுதாரர் எழுத்துப்பூர்வமாக அறிவித்து, கார்டு மற்றும் ஏதேனும் கூடுதல் கார்டு இருந்தால், அதனையும் (தேவை இல்லை என்றால்) காந்தப் பட்டையின் ஊடாகப் பல துண்டுகளாக வெட்டி, ஆக்ஸிஸ் பேங்க்கிடம் திருப்பி அளிக்க வேண்டும். இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பொருந்தக்கூடிய தன்மை நிறுத்தப்பட்டாலும் கூட, கார்டை அழித்துவிட்டதாக கார்டுதாரர் தெரிவித்த பிறகும், டெபிட் கார்டில் ஏற்படும் அனைத்து கார்டு வசதிகள் மற்றும் தொடர்புடைய கட்டணங்களுக்கு கார்டுதாரர் பொறுப்பாவார். கார்டு தவறாகப் பயன்படுத்தப்பட்டாலும்/ மோசடியாகப் பயன்படுத்தப்பட்டாலும் மற்றும் கார்டு அழிக்கப்பட்டதாக பேங்க்குக்குத் தெரிவிக்கப்பட்டாலும், இல்லை என்றாலும் டெபிட் கார்டில் ஏற்படும் அனைத்துக் கட்டணங்களுக்கும் கார்டுதாரரே பொறுப்பாவார். https://www.axisbank.com/retail/cards/debit-cards/useful-links/total-control?cta=debit-card-total-control-என்ற இணைப்பில் கார்டுதாரர் தனது கார்டை தடுக்கலாம். எங்கள் வாடிக்கையாளர் சேவை எண்களுக்கும் கார்டுதாரர் அழைக்கலாம்.
4. கார்டு ஆக்ஸிஸ் பேங்க்கின் சொத்தாகும். கோரிக்கையின் பேரில் உடனடியாகவும், நிபந்தனையின்றியும் ஆக்ஸிஸ் பேங்க்கின் அதிகாரியிடம் இதை திருப்பி ஒப்படைக்க வேண்டும். உங்கள் கார்டை ஒப்படைப்பதற்கு முன், வங்கி அதிகாரியின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
5. பின்வரும் நிகழ்வுகளில் ஏதேனும் ஒன்று நடந்தால், உடனடியாக டெபிட் கார்டு வசதியை நிறுத்தும் உரிமை ஆக்ஸிஸ் பேங்க்குக்கு உள்ளது. மேலும், கார்டைத் திருப்பி அளிக்க வேண்டும்: I. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கத் தவறினால் ii. ஆக்ஸிஸ் பேங்க்குடன் செய்யப்பட்ட ஒப்பந்தம் அல்லது உறுதிமொழியின் கீழ் (தற்செயலாக அல்லது வேறுவிதமாக) கொடாநிலை ஏற்படும் நிகழ்வு. iii. கார்டுதாரர் ஏதேனும் திவால்நிலை, திவால் நடவடிக்கைகள் அல்லது அது போன்ற நடவடிக்கைகளுக்கு உள்ளானால். iv. கார்டுதாரரின் இறப்பு. v. கார்டுதாரரின் கணக்கை மூடுதல் அல்லது கூறப்பட்ட கணக்கில் குறைந்தபட்ச சராசரி இருப்பை பராமரிக்கத் தவறுதல் vi. ஆர்பிஐ/2013-14/265 என்ற சுற்றறிக்கையில் ஆர்பிஐ அறிவுறுத்தியபடி தடைசெய்யப்பட்ட வணிக நிலையங்களில் கார்டுதாரர் ஒரு பரிவர்த்தனையைச் செய்தால்.
6. கார்டுக்கு பொருந்தக்கூடிய அம்சங்களுக்கு முன்மொழியப்பட்ட மாற்றங்கள் அல்லது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் மாற்றங்களை கார்டுதாரர் நிராகரிக்கும் பட்சத்தில், ஏதேனும் மாற்றங்கள் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னதாக டெபிட் கார்டை ஆக்ஸிஸ் பேங்க்கிடம் திருப்பியளிக்க வேண்டும்.

## கார்டு உறுப்பினர் ஒப்பந்தத்தில் வெளிப்படுத்தல்:

மேலும் நீங்கள், இந்திய ரிசர்வ் வங்கி (RBI), வருமான வரித் துறை அதிகாரிகள், கடன் மதிப்பீட்டு முகமைகள் அல்லது வேறு ஏதேனும் அரசு அல்லது ஒழுங்குமுறை அதிகாரிகள்/ அமைப்புகள்/ துறைகள் ஆகியவற்றிற்கு அத்தகைய தகவலை வெளியிட நீங்கள் வங்கியை அங்கீகரிக்கிறீர்கள். மேலும், நீங்கள் பணம் செலுத்துவதில் கொடாநிலையாக அல்லது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்காமல் இருந்தால், வங்கிகள், நிதி நிறுவனங்கள், கிரெடிட் பீரோ/ முகமைகள், தரவு வங்கிகள், மூன்றாம் தரப்பினர் உள்ளிட்ட மேற்கூறிய அதிகார அமைப்புகளுக்கு உங்கள் பெயரைச் சரிபார்க்க, பகிர மற்றும்/அல்லது வெளிப்படுத்த, வங்கியை நீங்கள் அங்கீகரிக்கிறீர்கள்.

பல்வேறு அம்சங்கள் மற்றும் நன்மைகளுடன் டெபிட் கார்டுகளை ஆக்ஸிஸ் பேங்க் வழங்குகிறது. அவற்றை வழங்குவதற்காக, கார்டு பாதுகாப்புத் திட்டங்கள் போன்ற வவுச்சர்கள்/ தள்ளுபடிகள்/ கேஷ்பேக்குகள்/ உறுப்பினர் தகுதிகள்/ காப்பீட்டு விருப்பங்கள் அடிப்படையில் கார்டுதாரருக்கு தயாரிப்பு அம்சங்கள்/ நன்மைகள்/ மற்றும் பிற மதிப்புக் கூட்டப்பட்ட சேவைகளை வழங்குவதற்காக ஒப்பந்த ஆடிப்படையில் பல்வேறு சேவை வழங்குநர்களை ஆக்ஸிஸ் பேங்க் பயன்படுத்துகிறது. பதிவுசெய்தல், கார்டு அம்சத்தை நிறைவேற்றுதல், சந்தைப்படுத்துதல், விளம்பர நடவடிக்கைகள் மற்றும் பலன் மீட்பு ஆகியவற்றுக்காக ஆக்ஸிஸ் பேங்க்கின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர்களிடம் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் முக்கியமான தனிப்பட்ட தகவல்கள் (“தனிப்பட்ட தரவு”) உள்ளிட்ட கார்டுதாரரின் தனிப்பட்ட தரவுகளைப் பெற, சேகரிக்க, செயலாக்க, பதிவு செய்ய, பகிர மற்றும் வெளியிட ஆக்ஸிஸ் பேங்க்குக்கு கார்டுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புதல் அளித்து, அங்கீகரித்துள்ளனர் பொருந்தக்கூடிய அனைத்து டெபிட் கார்டுகளுக்கும் அத்தகைய ஒப்புதல் செல்லுபடியாகும் என்பதைக் கார்டுதாரர் புரிந்து கொண்டு, ஒப்புக்கொள்கிறார்.

## மூன்றாம் தரப்பினரின் அழைப்பிற்கு ஒப்புதல்

ஆக்ஸிஸ் பேங்க், காப்பீட்டு நிறுவனங்களுடன் இணைந்து, கார்டுகள் தொலைந்து போதல், கார்டு மோசடிகள் போன்றவற்றால் ஏற்படும் பொறுப்புகளை கவனித்துக்கொள்ள, ஆக்ஸிஸ் பேங்க் டெபிட் கார்டு மூலம் காப்பீட்டுப் பாதுகாப்பை (“காப்பீட்டு பாதுகாப்பு”) வழங்குகிறது. ஆக்ஸிஸ் பேங்க் டெபிட் கார்டு மூலம் அத்தகைய காப்பீட்டுப் பாதுகாப்பைப் பெறுவதைக் கார்டுதாரர் தேர்ந்தெடுத்தால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் படித்து, புரிந்துகொண்டு, ஒப்புக்கொண்டதாக கார்டுதாரர் உறுதிப்படுத்துகிறார்:

1. கார்டுதாரரின் ஆக்ஸிஸ் பேங்க் டெபிட் கார்டில் தொடர்புடைய காப்பீட்டுப் பாதுகாப்பை வழங்குவதற்காக, அழைப்பதற்கு மற்றும் அடைவதற்கு ஆக்ஸிஸ் பேங்க்கின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர்கள் மற்றும்/அல்லது இணைந்து செயல்படும் காப்பீட்டு நிறுவனங்களுடன் தனது தனிப்பட்ட தரவைப் பகிர்ந்து கொள்ளவும், அத்தகைய காப்பீட்டுப் பாதுகாப்பைப் பெறுவதற்காக கார்டுதாரரின் தனிப்பட்ட தரவைச் செயலாக்குவதற்கும் ("நோக்கம்"). இதன் மூலம் ஆக்ஸிஸ் பேங்க்குக்கு கார்டுதாரர் வெளிப்படையான ஒப்புதலை வழங்குகிறார்.
2. கார்டுதாரரின் தனியுரிமையைப் பாதுகாப்பதற்கு ஆக்ஸிஸ் பேங்க் உறுதி பூண்டுள்ளது, மேலும் எந்தவொரு தனிப்பட்ட தரவும் பொருந்தக்கூடிய தரவுப் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க, ஆக்ஸிஸ் பேங்க்கின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர்கள் மற்றும்/அல்லது இணைந்து செயல்படும் காப்பீட்டு நிறுவனங்களுடன் மட்டுமே பகிரப்படும். ஆக்ஸிஸ் பேங்க் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர்கள்/ இணைந்து செயல்படும் காப்பீட்டு நிறுவனங்கள் நோக்கத்திற்காக தனிப்பட்ட தரவுகளைப் பகிர்ந்து கொள்ளும் போது தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பதற்கான நியாயமான பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்தும்.
3. நோக்கத்திற்காக இத்தகைய அழைப்புகள் மேற்கொள்ளப்படும் கால இடைவெளி நியாயமானதாகவும், தொடர்புடைய விதிமுறைகளுக்கு இணங்கவும் இருப்பதை ஆக்ஸிஸ் பேங்க் உறுதி செய்யும். கார்டு வைத்திருப்பவருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தாமல் மதிப்புமிக்க தகவல்களை வழங்க ஆக்ஸிஸ் பேங்க், முயற்சிக்கிறது.
4. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதற்கான உரிமை ஆக்ஸிஸ் பேங்க்குக்கு உள்ளது. ஏதேனும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டால் பொருத்தமான சேனல்கள் மூலம் கார்டுதாரருக்குத் தெரிவிக்கப்படும்.

## இரகசியத்தன்மை

கணக்குத் துவங்கும் போது அல்லது கார்டை வழங்கும் போது பெறப்பட்ட வாடிக்கையாளர்கள் தொடர்பான எந்தத் தகவலையும், அந்தத் தகவல் பயன்படுத்தப்படும் நோக்கம்/ நோக்கங்கள் மற்றும் தகவல் பகிரப்படும் நிறுவனங்கள் குறித்து அவர்களின் வெளிப்படையான ஒப்புதலைப் பெறாமல், வேறு எந்த நபருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ கார்டு வழங்குநர்கள் வெளிப்படுத்தக் கூடாது.

## விசாரணைகள், கார்டு தொலைந்து போனதைத் தெரிவித்தல், மோசடியைப் புகாரளித்தல், கார்டைத் தடுத்தல் ஆகியவற்றுக்கான வங்கித் தொடர்பு விவரங்கள்:

- 1860 500 5555 அல்லது 1860 419 5555, இந்த எண்களை இந்தியாவில் உள்ள எந்த தொலைபேசி அல்லது அலைபேசியிலிருந்தும் அணுகலாம்
- +91 - 22-27648000 இந்த எண்ணை இந்தியாவிற்கு வெளியே இருந்து அணுகலாம்.
- அழைக்கவும்: 022 67987700
- SMS: +919951860002
- 5676782 என்ற எண்ணுக்கு “BLOCKCARD” என்று SMS அனுப்பவும்
- மின்னஞ்சல்: axisbank.com / support
- 7036165000 என்ற எண்ணுக்கு ‘Hi’ என்று வாட்ஸ்அப் செய்யவும்

## பொறுப்புத்துறப்பு:

வருவாய், இலாபம், வணிகம், ஒப்பந்தங்கள், எதிர்பார்க்கப்படும் சேமிப்பு அல்லது நற்பெயர், மென்பொருள் உள்ளிட்ட எந்த ஒரு உபகரணத்தின் பயன்பாடு அல்லது மதிப்பு இழப்பு ஆகியவை உட்பட, ஆனால் அவை மட்டுமல்லாமல், முன்னறிவிக்கப்பட்டாலும், இல்லாவிட்டாலும், பயனரால் அல்லது ஏதேனும் நபராலும், நேரடியாகவோ, மறைமுகமாகவோ அல்லது விளைவானதாகவோ ஏதேனும் இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டால் வங்கி, அதன் பணியாளர்கள், முகவர்கள் அல்லது ஒப்பந்ததாரர்கள் பொறுப்பேற்க மாட்டார்கள். இருப்பினும், கோரிக்கையைப் பெறுதல் மற்றும் செயலாக்குதல் மற்றும் பதில்களை உருவாக்குதல் மற்றும் திரும்பஅனுப்புதல் ஆகியவற்றில் ஏற்படும் ஏதேனும் தாமதம், தடங்கல், இடைநீக்கம், தீர்வு அல்லது ஏதேனும் செயலிழப்பு, தாமதம், குறுக்கீடு, இடைநிறுத்தம், கட்டுப்பாடு அல்லது பரிமாற்றத்தில் பிழை பயனரின் தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் எந்தவொரு சேவை வழங்குநரின் நெட்வொர்க் மற்றும் பேங்க்கின் அமைப்பு அல்லது பயனர், பேங்க்கின் கணினி அல்லது எந்தவொரு சேவை வழங்குநரின் நெட்வொர்க்கின் தொலைத்தொடர்பு சாதனங்களில் அல்லது மூன்றாம் தரப்பினர் வழங்கும் தகவல் அல்லது செய்தி மற்றும் / அல்லது வசதியை வழங்குவதற்கு அவசியமான சேவைகளில் ஏற்படும் ஏதேனும் செயலிழப்பு, குறுக்கீடு, இடைநிறுத்தம் அல்லது செயலிழப்பு போன்றவற்றுக்கு ஆக்ஸிஸ் பேங்க் பொறுப்பாகாது. ஆக்ஸிஸ் பேங்க் அதன் சொந்த விருப்பத்தின் பேரில், அதன் தயாரிப்புகள் தொடர்பாக, வெளிப்புற சேவை வழங்குநர்/கள் அல்லது முகவர்/கள் மற்றும் தேவைப்படும் அல்லது அவசியமான விதிமுறைகளின் அடிப்படையில் சேவைகளைப் பயன்படுத்தலாம்.

- 21 வேலை நாட்களுக்குள் விண்ணப்ப படிவத்தின் நிலையை ஆக்ஸிஸ் பேங்க் தெரிவிக்கும்.
- ஏதேனும் டீல்கள், பரிசுகள், வவுச்சர்கள், ரிவார்டு பாயின்ட்களை ரெடீம் செய்தல், கார்டை செயல்படுத்துதல் அல்லது ரத்து செய்தல் போன்றவற்றுக்காக, கார்டு CVV, PIN, OTP அல்லது இன்டர்நெட் கடவுச்சொல்லை ஆக்ஸிஸ் பேங்க் ஒருபோதும் கேட்காது. அத்தகைய கோரிக்கைகளை தயவுசெய்து புறக்கணிக்கவும். எந்தவொரு தகவல் தொடர்பிற்கும் முன்பாக, ஆக்ஸிஸ் பேங்க்கின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் உள்ள தொடர்பு எண்களை உறுதிப்படுத்தவும்.
- ஏதேனும் ஆன்லைன்/ இ-காமர்ஸ் பரிவர்த்தனைகளைத் தொடங்குவதற்கு முன், இணையதளம் மற்றும்/அல்லது போர்ட்டலின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தவும். உங்கள் பணத்தை மோசடி செய்யும் போலி இணையதளங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கவும்.
- வங்கியால் வழங்கப்படும் கார்டு வாடிக்கையாளரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்கானதாகும். மூன்றாம் தரப்பினரின் சார்பாக அல்லது நன்மைக்காக செய்யப்படும் பரிவர்த்தனைகளை வங்கி ஊக்குவிக்காது அல்லது ஆதரிக்காது.
- சர்வதேச பரிவர்த்தனைகளுக்கான வணிகர்களின் ரீஃபண்டுகள்/ சச்சரவுகள் ஏற்பட்டால், நாணய ஏற்ற இறக்கத்தால் எழும் ஏதேனும் விகித வித்தியாசத்தை வாடிக்கையாளரே ஏற்க வேண்டும்.

  **தொடர்பு கொள்ளும் சேனல்கள்**

## குறை தீர்த்தல் மற்றும் இழப்பீடு கட்டமைப்பு

புகார்களை / கவலைகளை (நிலை 1 புகார்கள்) பதிவு செய்வதற்கு / தாக்கல் செய்வதற்கு வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் சேனல்கள்:

a. வங்கியால் வழங்கப்படும் ஏதேனும் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் குறித்து வாடிக்கையாளர்களின் குறைகளை பதிவு செய்ய பின்வரும் முன்-இறுதி முனையங்களை வங்கி செயல்படுத்தியுள்ளது:
    - ஆக்ஸிஸ் பேங்க்கின் ஏதேனும் கிளைகள் மற்றும் கடன் மையங்கள் (கடன் தொடர்பான புகார்களுக்கு),
    - வங்கியின் போன் பேங்க் சென்டர் / கால் சென்டர்
    - பேங்க்கின் மின்னஞ்சல் / வெப்சாட் சேனல்கள்,
    - ஆக்ஸிஸ்ஆதரவு - வாடிக்கையாளர் புகார்களை அளிக்கக் கூடிய ஆக்ஸிஸ் பேங்க் இணையதளத்தில் உள்ள வலைப்பக்கம்.
    - ஆக்ஸிஸ் வங்கி சமூக ஊடக கையாளுதல்கள்
b. இங்கேயுள்ள பின் இணைப்பில் இடம்பெறும் பல்வேறு வகை பரிவர்த்தனைகளுக்கு வரையறுக்கப்பட்ட காலக்கெடுவின்படி பதில்கள்/ தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். வாடிக்கையாளர்கள் எழுப்பும் குறைகளைக் கண்காணித்து, தெரிவிக்க வங்கி பொருத்தமான அமைப்பைப் பயன்படுத்துகிறது. ரெகுலேட்டர் மூலம் பெறப்படும் தகவல் தொடர்புகள் தொடர்புடைய ரெகுலேட்டரால் கட்டாயமாக்கப்பட்டுள்ள காலக்கெடுவின்படி தீர்க்கப்படும்.
c. வங்கியின் கால் சென்டர், மின்னஞ்சல் / சாட் மூலமாகவும் மற்றும் லோன் சென்டர்கள் மற்றும் கிளைகளில் நேரில் சென்றும் பதிவுசெய்யப்பட்ட அனைத்து நிலை 1 புகார்கள் / பிணக்குகள் /குறைகள் வாடிக்கையாளர் பிரச்சினையை அங்கீகரிப்பதுடன், வங்கியின் குறிப்பிட்ட அமைப்பில் பதிவு செய்யப்படும்.
d. நிலை 1 புகார்கள் / சர்ச்சைகள் / கவலைகள் தொடர்பான பதிலுக்காக வங்கி 10 நாட்கள் வரையறுக்கப்பட்ட நேரத்தைக் கொண்டுள்ளது.

e. முதல் நிலையில் உள்ள பல்வேறு தொடர்பு முனையங்களுக்கான விவரங்கள் பின்வருமாறு:

| வ.எண் | சேனல்கள் | விவரங்கள் |
|---|---|---|
| 1 | கால் சென்டர்கள் / போன் பேங்கிங் சென்டர்கள் | 1800 209 5577<br>1860 500 5555 |
| 2 | வலைத்தள ஆதரவு | www.axisbank.com/support |
| 3 | கிளைகள் / லோன் சென்டர்கள் | அருகிலுள்ள கிளை / லோன் சென்டரை அறிய www.axisbank.com வருகைத்தரவும் |

என்ஆர்ஐ போன் பேங்கிங் சேவைகளைப் பெற, உங்கள் நாட்டிலுள்ள இலவச தொலைபேசி எண்ணில் எங்களை அழைக்கவும்.

**நாடு வாரியான இலவச தொலைபேசி எண்களின் பட்டியல்:**

- அமெரிக்கா: 1855 205 5577
- இங்கிலாந்து: 0808 178 5040
- சிங்கப்பூர்: 800 1206 355
- கனடா: 1855 436 0726
- ஆஸ்திரேலியா: 1800 153 861
- ஐக்கிய அரபு அமீரகம்: 8000 3570 3218
- சௌதி அரேபியா: 800 850 0000
- கத்தர்: 00 800 100 348

இந்தியாவிற்கான எங்கள் கட்டண தொலைபேசி எண்ணான +91-40-6717-4100 இல் நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளலாம் அல்லது www.axisbank.com/support என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்

உங்கள் கிரெடிட்/டெபிட் கார்டை பிளாக் செய்வது போன்ற அவசர நிலைகளுக்கு, எங்கள் 24 மணி நேர அவசர உதவி எண், +91 40 67174100-ஐ அழைக்கலாம் (இது ஒரு கட்டண தொலைபேசி எண்).

**காலவரையறைகள் மற்றும் இழப்பீடு:**

**டர்ன் அரவுண்ட் டைம் (டிஏடி) சமன் செய்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பணம்செலுத்தல் முறைகளைப் பயன்படுத்தி தோல்வியுற்ற பரிவர்த்தனைகளுக்கு வாடிக்கையாளர் இழப்பீடு**

| வ.எண் | சம்பவத்தின் விவரம் | ஆட்டோ ரிவர்சல் மற்றும் இழப்பீட்டிற்கான விதிமுறைகள் | |
|---|---|---|---|
| | | ஆட்டோ ரிவர்சலுக்கான காலக்கெடு | செலுத்த வேண்டிய இழப்பீடு |
| I | II | III | IV |
| 1. | **மைக்ரோ ஏடிஎம்-கள் உட்பட தன்னியக்க பணம் வழங்கும் இயந்திரங்கள் (ஏடிஎம்)** | | |
| a | வாடிக்கையாளரின் கணக்கு டெபிட் செய்யப்பட்டுள்ளது ஆனால் பணம் இயந்திரத்திலிருந்து வெளியே வரவில்லை. | அதிகபட்சம் T +5 நாட்களுக்குள் தோல்வியுற்ற பரிவர்த்தனைக்கான பணம் ஆட்டோ ரிவர்சல் செய்யப்படும் | T +5 நாட்களுக்கு மேல் ஆனால், தாமதமாகும் ஒவ்வொரு நாளுக்கும், கணக்கு வைத்திருப்பவரின் கணக்கில் ₹100 கிரெடிட் செய்யப்படும். |
| 2. | **கார்டு பரிவர்த்தனை** | | |
| a | ஒரு கார்டிலிருந்து இன்னொரு கார்டுக்கு பணப் பரிமாற்றம்<br>கார்டுதாரரின் கார்டு கணக்கு டெபிட் செய்யப்பட்டுள்ளது ஆனால் பயனாளியின் கார்டு கணக்கில் பணம் கிரெடிட் ஆகவில்லை | பயனாளியின் கார்டு கணக்கில் கிரெடிட் ஆகாவிட்டால், T + 1 நாட்களுக்குள் பரிவர்த்தனை ரிவர்ஸ் (R) செய்யப்பட வேண்டும் | T + 1 நாட்களைத் தாண்டி தாமதமாகும் ஒவ்வொரு நாளுக்கும் ₹100. |
| b | பாயிண்ட் ஆஃப் சேல் (பிஓஎஸ்) (பிஓஎஸ்-இல் பணம் எடுக்கும் வசதிஉட்பட)<br>கணக்கு டெபிட் செய்யப்பட்டுள்ளது, ஆனால் வணிகர் இருப்பிடத்தில் உறுதிப்படுத்தல் பெறப்படவில்லை அதாவது., சார்ஜ்-ஸ்லிப் வரவில்லை. | T + 5 நாட்களுக்குள் ஆட்டோ ரிவர்சல் செய்யப்படும். | T + 5 நாட்களைத் தாண்டி தாமதமாகும் ஒவ்வொரு நாளுக்கும் ₹100. |
| c | கார்டு இல்லை (சிஎன்பி) (இ-காமர்ஸ்)<br>கணக்கு டெபிட் செய்யப்பட்டுள்ளது, ஆனால் வணிகரின் அமைப்பில் உறுதிப்படுத்தல் பெறப்படவில்லை. | | |

1. தொலைநிலை/ஆன்லைன் பேமெண்ட்பரிவர்த்தனை மற்றும் அருகாமை பேமெண்ட் பரிவர்த்தனைகள் (ATM/POS) உள்ளிட்ட மோசடியான/அங்கீகரிக்கப்படாத மின்னணு வங்கி பரிவர்த்தனைகள்: 90 நாட்கள்
2. மோசடி அல்லாத / சேவை தொடர்பான (பிஓஎஸ் / இகாம்) புகார்கள்: 120 நாட்கள் (நெட்வொர்க் நிர்ணயித்த காலக்கெடு)
3. நிலை 1 /நிலை 2 /நிலை 3 ஐ அணுகிய பிறகும் வாடிக்கையாளர்களின் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருந்தால் அல்லது 30 நாட்களுக்குள் வங்கி ஒரு தீர்வை வழங்கவில்லை என்றால், வாடிக்கையாளர்கள் அந்த விஷயத்தை வங்கி ஓம்புட்ஸ்மேன் அலுவலகத்திற்குப் பரிந்துரைக்கலாம்.

பெறுநர்
திரு. ஜினித் டக்கர், குறை தீர்க்கும் நோடல் அதிகாரி

குறை தீர்க்கப்படாமல் நீடித்தால் அல்லது வாடிக்கையாளர் பதிலில் திருப்தி அடையவில்லை என்றால், வாடிக்கையாளர்கள் காலை 9:30 முதல் மாலை 5:30 வரை (வங்கி விடுமுறை நாட்கள் தவிர திங்கள் முதல் வெள்ளி வரை) வேலை நேரத்தில், பகிரப்பட்ட டிக்கெட் எண்ணுடன் ஆக்ஸிஸ் பேங்க்கின் நோடல் அலுவலகத்தை அணுகலாம்)
அஞ்சல் முகவரி நோடல் அதிகாரி, ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட், NPC1, 5வது தளம், "கிகாப்ளெக்ஸ்", பிளாட் எண் I.T.5, MIDC, ஐரோலி நாலெட்ஜ் பார்க், ஐரோலி, நவி மும்பை-400708.
பதிவுசெய்யப்பட்ட முகவரி ஆக்ஸிஸ் பேங்க் லிமிடெட், 'திரிசூல்', 3வது தளம், சமர்த்தேஸ்வர் கோவில் எதிரில், லா கார்டன் அருகில், எல்லிஸ்பிரிட்ஜ், அகமதாபாத் - 380 006

**பிராந்திய மொழிகளில் கிடைக்கும் எம்ஐடிசி - க்கான இணைப்புகள்:**

Hindi : https://www.axisbank.com/docs/default-source/default-document-library/debit-card-mitc-hindi

Marathi : https://www.axisbank.com/docs/default-source/default-document-library/debit-card-mitc-marathi

Gujarati : https://www.axisbank.com/docs/default-source/default-document-library/debit-card-mitc-gujrati

Assamese : https://www.axisbank.com/docs/default-source/default-document-library/debit-card-mitc-assamese

Kannada : https://www.axisbank.com/docs/default-source/default-document-library/debit-card-mitc-kannada

Bengali : https://www.axisbank.com/docs/default-source/default-document-library/debit-card-mitc-bengali

Malayalam : https://www.axisbank.com/docs/default-source/default-document-library/debit-card-mitc-malayalam

Odia : https://www.axisbank.com/docs/default-source/default-document-library/debit-card-mitc-odia

Punjabi : https://www.axisbank.com/docs/default-source/default-document-library/debit-card-mitc-punjabi.pdf